விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= வரை

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 187 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 09 ஞாயிற்றுக்கிழமை (23.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## இலவசக் கல்வியை பாதுகாக்க நடவடிக்கை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்




(கொழும்பு)

தமது அரசாங்கத்தின் கீழ் இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். 19

## சொத்து வரி 2025 முதல் அமுல்; 90 வீதம் சாதாரண மக்களைப் பாதிக்காது

### நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

உத்தேச சொத்து வரியானது 2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்குப் பின்னர் நடைமுறைக்கு வரும் என்றும் இது 90% சாதாரண மக்களை பாதிக்காது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த வரியானது உலகளவில் பல நாடு 19

# புதிய பொருளாதாரம் வடக்கில் உருவாக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

**யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தி புதிய பொருளாதாரம் உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக, இந்தியாவுடன் சிறப்பான பங்காளித்துவத்துடன் தொடர எதிர்பார்ப்பதாகவும் வலுச் 19

## கிளிநொச்சியில் 9 இலட்சம் பெறுமதியான தங்கம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதயநகர் மேற்குப் பகுதியில் வீடு ஒன்றில் களவாடப்பட்ட ஒன்பது இலட்சம் பெறுமதியான தங்கம் பொலிஸாரால் 19

## சுகாதார அமைச்சு பதவியில் மாற்றம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சுப் பதவியில் மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதன்படி, எதிர் வரும் மாதத்தின் 04

## நாட்டு மக்களுக்கு உரிமைகள் வழங்குவதே பிரதான நோக்கம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

நாட்டு மக்களுக்கு உரிமைகளை வழங்குவதே தனது பிரதான நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று 27,595 குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

'இந்நாட்டின் 19

## 25 சதவீத மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறத் தயார்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

25 சதவீத மருத்துவர்கள் நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு தயாராகி வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2 வருடங்களில் 1,800 மருத்துவர்கள் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளதாக அவர் 19

## யாழ்.போதனாவில் நோயாளியிடம் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நோயாளி ஒருவரிடம் திருடிய நபரொருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்தத் திருட்டுச் சம்பவமானது நேற்று 19

## கொழும்புத் துறைமுகத்தில் இந்தியப் போர்க் கப்பல்



19

## நயினாதீவில் பௌத்த மாநாடு

(யாழ்ப்பாணம்)

உலக இளைஞர் பௌத்த சங்க சபையின் 20ஆவது வருடாந்த மாநாடு மற்றும் உலக பௌத்த முன்னணியின் 5 ஆவது வருடாந்த மாநாடு யாழ்ப்பாணம் நயினாதீவில் நேற்று நடைபெற்றது.

மத அனுஷ்டானங்களுடன் நேற்று மாநாடு ஆரம்பமானது.

பௌத்த அமைப்புகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தல், இளம் தலைமுறையினரிடையே மதத்தின் விழுமியங்களை மேம்படுத்துதல் உள் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அரும்பாக 20 . 07 . 1974

சருகாக 15 . 07 . 2022

### அமரர் கலைமதி செல்லத்துரை


[ BBA(Hons), Dip in Pub.ADM, MA in Pub. ADM, LLB(Hons) ]

எம் கண்ணை விட்டு
இம் மண்ணை விட்டு - மறைந்து
ஆண்டுகள் இரண்டாயிற்று
ஆனாலும் உன் குரல்
இன்னமும் எம் காதோரம் கேட்குதம்மா
உன் நினைவுகளை மட்டும் - இங்கு
விட்டு விட்டு விண்ணுலகம் சென்றுவிட்ட
நெஞ்சம் நிறைந்த உன் நினைவுகளோடு
எம் மீதி வாழ்வைக் கடத்துகிறோம்.

(104)

இங்ஙனம் :
தாய், சகோதரிகள்

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை பாலகிருஷ்ணன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாலகிருஷ்ணன் அவர்கள் (21.06.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - ராஜநாச்சியார் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தர்மபால் - வள்ளிக்கொடி தம்பதியினரின் அன்பு மருமகனும் ரஜனி அவர்களின் ஆருயிர்க் கணவரும் சத்தியவாணி(லண்டன்), துவாரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சஞ்ஜேயன்(லண்டன்), ஜீவனா ஆகியோரின் மாமனாரும் பாலசுப்பிரமணியம்(நியூசிலாந்து), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன், விஜயலக்சுமி(மலேசியா), அனுசியா(மலேசியா,Dr), காலஞ்சென்ற சந்திராதேவி(உமா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ராதா, குலோதுங்கபாரதி, கௌரி, யோகலஷ்மி, மங்கையர்க்கரசி, பாலசுந்தரன் ஆகியோரின் மைத்துனரும் அனிஷ், ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (23.06.2024) இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

K.K.S Road,
மல்லாகம்.

(105)

தகவல் :


## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42வது ஒழுங்கையில்
இல.3 இல் இரண்டு அறைகள்
(AC/ NON AC) இணைந்த
குளியலறையுடன் கூடிய அடுக்குமாடி
வீடு மாத வாடகைக்குண்டு.

(1314)

தொடர்புகளுக்கு:
075 2786 033 (Whatsapp only)
077 875 7860

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ
42 வயது சொந்தமாக
தொழில் புரியும்
மணமகனுக்கு
மணமகள் தேவை.

(1315)

தொடர்புகளுக்கு: (Viber, Whatsapp)
077 905 8615

## பணியாளர்கள் தேவை

தேசிய லொத்தர் சபையின் யாழ் மாவட்ட விநியோக காரியாலயத்திற்கு பணியாளர்கள தேவை.

வயது : 18 - 25 (பெண்கள்)
தகைமை : O/L, A/L சித்தி
கணனி அறிவு, ஆங்கிலம்
அடிப்படை அறிவு

- யாழ் மாநகர சபை எல்லைக்குள் அல்லது அருகாமையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
- சம்பளம் நேர்முகத் தேர்வின் போது பேசி தீர்மானிக்கப்படும்.
(25,000 முதல் 40,000 வரை)

தொடர்புகளுக்கு :
(C-661)
077 405 5995
No.94 A, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## வீடு விற்பனைக்கு

யாழ்/புனித ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு
அருகாமையில் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய
1¾ பரப்பு வீடு விற்பனைக்கு உண்டு.
◈ விலை பேசித் தீர்மானிக்கலாம்.

(1316)

தொடர்புகளுக்கு: 076 116 3919


## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1955.05.05

மறைவு
2022.07.15

### அமரர் நடராஜா பிரபாகரன்

ஆண்டிரண்டு ஆனதோ அப்பா
நீவிர் எம்மை விட்டுப் பிரிந்து
ஆறவில்லை உம் நினைவுகள் எம் நெஞ்சில்
புன்னகை பூத்த உம் முகம் - என்றும்
பசுமரத்தாணியாய் எம் நெஞ்சில்...

*அன்புள்ள மனைவி*
பி.சுசீலாதேவி (முன்னாள் தாதிய உத்தியோகத்தர்)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைக் காய்ச்சல் தொடர்பில் இலங்கைக்கு எச்சரிக்கை விடுப்பு

**(ஜெனீவா)**

**பறவைக் காய்ச்சல் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு உலக சுகாதார நிறுவனம் இலங்கைக்கு அறிவுறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.**

இந்தியா போன்ற அயல் நாடுகளில் பறவைக் காய்ச்சல் பாதிப்புகள் பதிவாகியுள்ள நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பறவைக் காய்ச்சல் இன்ப்ளுவன்ஸா வைரஸால் ஏற்படுகின்ற நிலையில் இது முதலில் பறவைகளை பாதிக்கிறது பின்னர் மற்ற விலங்குகளையும் மனிதர்களையும் பாதிக்கிறது.

இன்ப்ளுவன்ஸா வைரஸின் பல திரிபுகள் மற்றும் துணைத் திரிபுகள் உள்ளன சமீபத்தில், இன்ப்ளுவன்ஸா ஏ வைரஸால் பாதிக்கப்பட்ட சிறுமி இந்தியாவில் அடையாளம் காணப்பட்டார்.

2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் இன்ப்ளுவன்ஸா ஏ (எச்.9.என்.2) வைரஸால் பாதிக்கப்பட்ட இரண்டாவது நோயாளி அந்த சிறுமியாகும்.

இதுவரை பதிவாகியுள்ள பறவைக் காய்ச்சலின் அனைத்தும் விலங்குகளிடமிருந்து வந்தவையாகும். அத்தோடு பறவைக் காய்ச்சல் மனிதனிடம் இருந்து மற்றுமொரு மனிதனுக்கு பரவியதற்கான எந்த ஆதாரமும் இதுவரை இல்லை.

தற்போதைய சூழ்நிலையின் அடிப்படையில் H5, H7 மற்றும் H9 ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பறவைக் காய்ச்சல் நோயாளிகளை அடையாளம் காணும் திறன் இலங்கையில் உள்ளது.

பறவைக் காய்ச்சல் கண்காணிப்பை மேற்கொள்ளும் மருத்துவமனைகள் பறவைக் காய்ச்சல் நோயாளிகளைக் கண்டறியும் திறனைக் கொண்டுள்ளதென மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைத்தியர் ஜூட் ஜயமஹா தெரிவித்துள்ளார்.

பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்கு ஏற்படுவது அரிதாக இருந்தாலும் விலங்குகளுடன் சுற்றித் திரிபவர்கள் எப்போதும் சவர்க்காரம் பயன்படுத்தி கைகளை கழுவவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)


FAMILY REHABILITATION CENTRE

Family Rehabilitation Centre (FRC) is a leading non-profit, non-sectarian organization engaged in providing holistic rehabilitation services, with increased priority given to Mental Health and Psychosocial Support (MHPSS) for the survivors and the immediate family members of Sri Lankans who have experienced trauma.

- **Senior Psychosocial Worker - 1 vacancy - Based in Kilinochchi**
- **Psychosocial Worker - 1 vacancy - Based in Jaffna**

**Main Responsibilities:**

**Psychosocial Worker :** Responsible for effective implementation of systematic counselling and psychosocial interventions with individuals and groups. Undertaking home visits wherever necessary and follow ups.

**Qualifications:** A Degree/Diploma in Counselling with at least 02 years of counselling experience.

**Senior Psychosocial Worker:** Responsible for monitoring and supervising of around 15 Psychosocial Workers in the Northern Province. Should be able to represent FRC in psychosocial forums and submit monthly reports in English to FRC head office.

**Qualifications:** A Degree / Diploma in counselling with at least 04 years of counselling experience. Competency in English is a must.

**Salary:** Negotiable.

Please forward your Cover Letter and CV via email (position mentioned in email subject line) with 2 non-related referees within 10 days to psychologist@frcsl.org (copied to frcsl@slt.lk).

**The Executive Director**
**Family Rehabilitation Centre**
**No. 296/14, Park Road, Colombo-05.**

(1277)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய
## மனவளக்கலை யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
பெருமையுடன் வழங்கும்
சாதாரண மனிதனை முழு மனிதனாக்கும்
மனவளக்கலையின் ஆரம்ப திறனூக்கப் பயிற்சிகள்

- உடல் நலத்திற்கு - எளியமுறை உடற் பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு - சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சிகள்
- மன அமைதிக்கு - தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு - அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட - தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் : 22.06.2024 சனிக்கிழமை தொடக்கம் 28.06.2024 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி D.ஜெயந்தி அவர்கள்
தமிழ்நாடு இந்தியா

மனவளக்கலை யோகா பயிற்சிகள் தொடர்ந்து
செய்வதனால் நீங்கும் நோய்கள்

| | |
|---|---|
| சக்கரை நோய் | - DIABETES |
| மன உளைச்சல் | - TENSION |
| இரத்த அழுத்தம் | - BLOOD PRESSURE |
| ஆஸ்த்துமா | - ASTHMA |
| மூட்டுவலி | - JOINT PAIN |
| இடுப்பு வலி | - BACK PAIN |
| சைனஸ் | - SINUS |
| இருதய நோய்கள் | - HEART DISEASE |
| குழந்தை பேறின்மை | - INFERTILITY |
| மாணவர் கை உதறல் | - SHIVERING |

தொடர்புகளுக்கு (C-0662)

யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 12 . 1972



மறைவு 22 . 06 . 2024

### திருமதி தம்பிரத்தினம் பவானி

கொல்லங்கலட்டி தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் மயிலங்கூடல் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிரத்தினம் பவானி அவர்கள் நேற்று (22.06.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் பேர்த்தியும் காலஞ் சென்றவர்களான துரைரத்தினம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பத்திநாதர் மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் தம்பிரத்தினத்தின் மனைவியும் நிரூபனின் (சரண்) அன்புத் தாயாரும் இரட்ணகுமார் (Denmark), ராஜகுமார் (London), சிவகுமார் (France), பராசக்தி (France) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோகரன் (அப்பு), கவிதா, ராதா, சுமதி, பற்றிமாநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மகேந்திரனின் அன்புச் சகலியும் திவிஷா, சணோயன், சபிரா, ரஜினா, விஷ்ருயன், இரதுர்யன், கம்சிஹா, டிலக்ஷன், கவிஷன், நிறேஷ், டயான், நிஷாந், லோகதர்சினி ஆகியோரின் அன்பு மாமியும் லிஷானி, கம்ஷாஜினி, கவிஷானி ஆகியோரின் அன்புச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக இல்லத்தில் இன்று (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி லேன்,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்
(C-0665) தொ.இல : 077 554 5405, 077 851 0671

## சுகாதார...

முதல் வாரத்தில் சுகாதார அமைச்சுப் பதவி உள்ளிட்ட சுகாதாரத்துறைசார் உயர் பதவிகளில் மாற்றம் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சர் பொறுப்பு ராஜித சேனாரட்னவிடம் வழங்கப்படும் எனவும், தற்போதைய சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரண பதவி விலகுவார் எனவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ம-7,10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## கண்ணீர்க் காணிக்கை

யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன்
வித்தியாலயத்தின் முன்னாள் பிரதி அதிபர்



### அமரர் மாலதி சிவராசா

அவர்கள் 20.06.2024 அன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

(0106) பாடசாலைச் சமூகம்
யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயம்

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(1317)

Golden Real Estate (pvt) Ltd
077 029 4164,
077 329 4130, 077 294 1521

## மரண அறிவித்தல்

### திருமதி நடராசா செல்வரத்தினம்



தோற்றம் : 10.06.1943 | மறைவு : 22.06.2024

காங்கேசன்துறை வீதி, இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா செல்வரத்தினம் அவர்கள் நேற்று (22.06.2024) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி - ஆச்சியம்மா தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் மருமருமகளும் உமாமகேஸ்வரனின் (ஈசன்) அன்புத் தாயாரும் தயாளினியின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் சிவகாமிப்பிள்ளை, இலட்சுமிப்பிள்ளை, கயிலாயநாயகி (நகுலேஸ்வரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குகனேஸ்வரன், சதுர்ஷன், அபிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் K.K.S வீதி, இணுவில் மேற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (23.06.2024) நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

K.K.S வீதி, இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்: மகன் ந.உமாமகேஸ்வரன்
(C-0663) தொ.இல : 076 897 1153

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.திரு.

## நா.க.முருகையா

இமைமூடும் நேரத்தில்
எங்களைவிட்டு பிரிந்தாய்
நாங்கள் இருக்கும் வரை
உன் நினைவில்
தான் இருப்போம்
என்றும் நீங்கா நினைவுகளுடன்...
(103)

அளவெட்டி,
தெற்கு

மனைவி-இரத்தினேஸ்வரி,
பிள்ளைகள் -மகன்குடும்பம்,
மகள் குடும்பம்.

---

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# 8ஆம் ஆண்டு நினைவுதினம்



அன்னை மடியில் 20.08.1999

ஆண்டவன் அடியில் 23.06.2016

அமரர்.

## தேவராசா நிறோஜ்

எட்டாண்டுகள் ஓடி மறைந்தாலும்
எட்டு நிமிடங்கள் கூட
நினைக்காமல் இருந்ததில்லையடா
தெய்வத்தால் தரப்பட்ட தெய்வம் நீ
என்றதனால் எம் உள்ளங்களில்
சாகா வரம் பெற்று வாழ்கின்றாய்...
(1293)

காளி கோவிலடி
தாவடி வடக்கு, தாவடி.

உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

---

# மஹோற்சவம்


(யாழ்ப்பாணம்)

நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தான மகோற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 10 தினங்கள் மஹோற்சவம் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை இடம்பெற்று காலை 8 மணிக்கு இரதோற்சவம் இடம் பெற்று 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (நி)

---

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 27.02.1956

விண்ணில் 23.06.2019

## அமரர். கிருஸ்ணபிள்ளை-செல்வநாயகம்

(தங்கக்கிளி)

ஆண்டுகள் ஐந்து சென்ற பின்பும்
ஆறாது எம் துயரம்
நீறாக நீ போனாலும் இன்றும்
உன் நினைவுகள் மட்டும்
செந்தணலாய் எம் மனங்களை
வெந்தளிக்கும் விழிநீர் சொரிய,
என்றும் எம் வலி சுமந்து
எம் குடும்பத்தின் தக்கத் தலைவனாய்
தடம் பதித்த எங்கள் தங்கம்
வருடங்கள் பல கடந்தாலும்
எம் வாழ்வு இருக்கும் வரை
உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு
நீங்காது நிலைத்திருக்கும்.
(102)

புதுவளவு,பொலிகண்டி தெற்கு,
வல்வெட்டித்துறை.

என்றும்
நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

---

# இராசிபலன்

23.06.2024
ஆனி 09, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை காலை 06.26 மணிவரை
துதியை பின்னிரவு 05.06 மணிவரை

பூராடம்-முன்னிரவு-6.41 மணிவரை
சுபநேரம் 08.54-10.24மணிவரை
இராகுகாலம் 04.24-5.54மணிவரை

சந்திராஷ்டமம்.
கார்த்திகை,ரோகிணி
சித்தாமிர்தம்.

வளவன்

**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்டவகையில் நன்மையுண்டு,மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும்நாள்.

**ரிஷபம்** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கலாம்.

**மிதுனம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்,பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் பொன்னான செய்தி யொன்று வந்து சேரலாம்,வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள் ளைகளின் நீண்ட நாளைய தேவைகளை நிறைவு செய்வீர்கள்,புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள்,தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**துலாம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு,வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்** குடும்ப மகிழ்ச்சி கூடும், தனவரவு திருப்திகரமாக அமையும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, செயற்பாடுகளில் தீவிரம் கூடும்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள்.

**மகரம்** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பயணங்களில் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்கவேண்டிய நாள்.


**கும்பம்** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் பாராட் டும் புகழும் கூடும் நாள், உன்னதமான வாழ்விற்கு அடித்தளம் அமைப்பீர்கள்.

**மீனம்** அரைகுறையாக இருந்த பணியை மீதியும் தொடர்வீர்கள், தொழில் ரீதியாகப் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் கூடும், போசன நன்மையுண்டு.

மனமார்ந்த பாராட்டு பொன்னை விட உயர்வான பரிசாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி சங்கத்தானையில் அரச பேருந்து- கார் விபத்து



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட சங்கத்தானைப் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை இரண்டு வாக னங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வருகை தந்து அரச பேருந்து ஒன்றும்-கார் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன. இருப்பினும் இதன்போது எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்பதுடன் வாகனங்கள் பகுதியளவில் சேதம டைந்துள்ளன.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலி ஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-30)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரி வும் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை சிறாம்பியடி லேன் யாழ்ப் பாணம் எனும் முகவரியில் அமைந் துள்ள யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் அலுவலகத்தில் இடம்பெற உள்ளது.

காலை 10 மணிக்கு ஆரம்பமாக உள்ள மேற்படி கூட்டத்தில் தமிழ்ச் சங்கத்தின் அனைத்து வகையான அங் கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்பாண தமிழ்ச் சங்கத்தின் செய லாளர் கு.றஜீபன் அறிவித்துள்ளார். (நி)


**"நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன் காரணம் என்னிடம் அதிகம் இருப்பதால் அல்ல இல்லாதவனின் வலியை புரிந்து கொண்டதால்"**

1. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியாசாலைக்கு முன்பாக 6 பரப்புக் காணியும், யாழ்.பலாலி வீதியில் baby photo இற்கு அண்மையில் 3 பரப்புக் காணியும் வீடும்
2. யாழ்.சிவன் கோவிலுக்கு அண்மையில் K.K.S றோட் முகப்புடன் 4 பரப்புக் காணியும், 5 பரப்புக் காணியும், 6 பரப்புக் காணியும்
3. யாழ்.மின்சார நிலைய வீதியில் "பழைய தபாற்கந்தோர் வீதியில்" 4 1/2 பரப்புக் காணியும்
4. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும்
5. யாழ்.பிறவுண் வீதியில் 2 பரப்பில் அமைந்த புதிய மாடி வீடும் 2 பரப்பு சுற்று மதிலுடன் கூடிய காணியும், 5 பரப்புக் காணியும்.
6. யாழ்.மின்சார நிலைய வீதியில் முதலாம் ஒழுங்கையில் 1 1/2 பரப்பில் அமைந்த வீடும்
7. யாழ். மின்சார நிலைய வீதியில் இரண்டாம் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியும்
8. யாழ்.திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் ஆடியபாதம் வீதியில் 5 பரப்புக் காணியும்
9. யாழ்.பலாலி வீதியில் பலாலி வீதி முகப்புடன் 5 பரப்பில் அமைந்த மாடி வீடும்
10. யாழ்.விக்ரோறியா வீதியில் 12 பரப்புக் காணியும், யாழ். அச்சுவேலியில் 160 பரப்புக் காணியும், காரைநகர் கசூர்னா பீச்சில் 160 பரப்புக் காணியும், யாழ்.கொட்டடியில் 6 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு

(1299)

**தொடர்பு**
**கனகசபை தர்மகுலசிங்கம்,**
**183, காலி வீதி, வெள்ளவத்தை,**
**தொலை.பேசி :-0777 232 535**

**185, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**



**லங்கா மஹறால் (PVT) LTD**

**DHL உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (554)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
**077 839 3974** (1305)



**வாடகைக்கு**

யாழ். நகருக்கு அண்மையில் beauty parlour நடாத்துவதற்கேற்றதொரு சிறிய பகுதி தளபாடங்களுடன் மகளிருக்கு உண்டு. (சி-859)

தொடர்புகளுக்கு
**074 217 0383**


# பிரம்மோத்ஸவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வட-கிழக்கு கலட்டி வீரகத்திப்பிள்ளையார் தேவ ஸ்தான கொடியேற்ற நிகழ்வு 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்ப மாகும்.

தினமும் காலை 10 மணிக் கும் இரவு 7 மணிக்கும் வசந்த மண்டபப் பூஜை இடம் பெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக் கிழமைகாலை 8 மணிக்கு தேர்த்திரு விழாவும் 12 ஆம் திகதி வெள்ளிக் கிழமைகாலை 9 மணிக்கு தீர்த்தோற்சவ மும் 16 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை வைரவர், வீரபத்திரர் உற்சவமும் இடம்பெறும் என ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. து. விவேகான ந்தக் குருக்கள் அறிவித்துள் ளார். (நி)


**மணமகள் தேவை**

1991 யாழிந்து. ஸ்வாதி. Software Engineer. Australia. மணமகன் (சொந்த இடம்: நயினாதீவு) பதிவு இல: 10708. தரகர்கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW. EQ MarriageService.com இணையவழி திரு மண சேவை. பம்பலப்பிட்டி, கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401. (சி-2319)

**மணமகள் தேவை**

1989 யாழிந்து. பூரட்டாதி. Accountant,Germany. (சொந்த இடம்: கர வெட்டி) மணமகன் பதிவு இல: 10645. தரகர்கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQMarriageService.com இணையவழி திருமண சேவை. பம்பலப்பிட்டி. கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401. (சி-2319)

**மணமகள் தேவை**

1995 யாழிந்து. திருவோணம். Doctor,Jaffna. மணமகன் பதிவு இல: 10259. தரகர்கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW. EQ MarriageService.com இணையவழி திரு மண சேவை. பம்பலப்பிட்டி, கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401. (சி-2319)

**மணமகன் தேவை**

1995 யாழிந்து. உத்தரம். Teacher, Jaffna. மணமகள் பதிவு இல: 10683. தரகர்கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQ Marriage Service.com இணையவழி திருமண சேவை. பம்பலப்பிட்டி, கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401. (சி-2319)

**மணமகன் தேவை**

1986 யாழிந்து. கார்த்திகை. Engineer,Jaffna. மணமகள் பதிவு இல: 10719. தரகர்கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQ MarriageService.com இணையவழி திரு மண சேவை. பம்பலப்பிட்டி. கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401. (சி-2319)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**நெல்லியடி வாணிபர் கழகத்தால் 19.06.2024 அன்று யாழ். பீச் ஹொட்டலில் நடைபெற்ற விருது வழங்கல் நிகழ்வில் சான்றோர் கௌரவிப்பில் வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ P.S.M சாள்ஸ் அவர்களால்...**



தமிழிற்கும்,சமூகத்திற்கும் ஆற்றும் சேவையைக் கௌரவித்து கலாநிதி. ஆறு.திருமுருகன் அவர்களுக்கு "பொதுப்பணி பூபதி" எனும் கௌரவப் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்.



வைத்திய துறையில் சிறப்பாக சேவையாற்றிக் கொண்டிருப்பதை கௌரவித்து Dr.S P. ஆதித்தன் MBBS.MRCS.MD(SUR) (நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் - யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.



வைத்திய நிர்வாக சேவையில் சிறப்பாகக் கடமையாற்றிக் கொண்டிருப்பதை கௌரவித்து Dr.A.கேதீஸ்வரன் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.



வறுமைக்குட்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், கலை கலாசார வளர்ச்சிக்கும் அனுசரணை வழங்குவதை கௌரவித்து கலாநிதி. E.S.P. நாகரத்தினம் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.

இவர்கள் மென்மேலும் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**நெல்லியடி வாணிபர் கழகம் ,கரவெட்டி.** (சி-658)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 447

Viber 076 636 3378



# வஞ்சிக்கப்பட்ட தமிழினத்தை மீட்குமா இந்தியா

**"தெற்காசியாவின் வல்லரசாக திகழும் இந்தியாவை மீறி இலங்கையில் யாரும் எதுவும் செய்துவிட முடியாது. இந்தியா-சீனா முறுகலுக்குரிய காரணங்களும் இதுவே. இலங்கையில் ஆழ ஊடுருவி இந்தியாவை அச்சுறுத்த முனைகிறது சீனா. ஆயினும் இந்தியா அதற்கு இடம் கொடாமல் முன்னிற்கிறது.**

இலங்கையில் மூன்று தசாப்தத்திற்கு மேல் போர் தொடர்ந்ததும், போர் நிறைவுற்று ஒரு தசாப்தம் கடந்தும் ஆட்சியாளர்களால் வஞ்சிக்கப்பட்ட தமிழினத்திற்கு முறையான அரசியல் தீர்வு கிடைக்காததும் ஏன் என்பது ஆராய வேண்டிய விடயம்.

உலக வரலாற்றில் தெற்காசியாவின் அசைக்க முடியாத சக்தியாக இருந்துவரும் இந்தியாவிற்கு மிக அருகிலேயே இலங்கைத்தீவு இருக்கிறது.

தவிர வரலாற்று,புவியியல் ரீதியாக இந்திய- இலங்கைத் தொடர்பு இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

ஆயினும் ஏன் இலங்கையில் நடந்த உள் நாட்டுப் போர் முடிவுக்கு வரவில்லை.

கொஞ்சமும் மனச்சாட்சியின்றி சிறுபான்மைத் தமிழினம் அழிக்கப்பட்டதையும் அவர்கள் நிலங்கள் சூறையாடப்பட்டதையும் எதிர்த்து எவரும் கேள்வி கேட்காதது ஏன் என்பதை ஆராய்ந்தால் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியின் இறப்பே காரணமாக அமைந்து நிற்கும்.

இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்டதனாலேயே இலங்கையின் உள் நாட்டுப் போரை இந்தியா முடிவுக்குக் கொண்டுவரவில்லை.

அவ்வாறானதொரு துன்பியல் நடைபெறாமல் இருந்திருக்குமாக இருந்திருந்தால் இன்று இத்தனையாயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள் என்ற உண்மையையும் நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

வரலாற்று- புவியியல் ரீதியில் இந்தியா-இலங்கை உறவு பலமாக இருக்க தமிழினம் மிக முக்கியமான பங்காற்றியது. இந்தியாவையும் இலங்கையையும் இணைத்த இராமர் பாலம் தமிழர் பூர்வீக பூமியுடன் தொடர்பில் இருப்பதும் இதற்கான பிரதான காரணமாகிறது.

இவ்வாறான நிலையிலேதான் இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரில் தமிழினம் துன்பப்படுவதை உணர்ந்து தமிழர் பூர்வீகங்களையும் அவர் தம் உரிமைகளையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்திய அரசினால் 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் கொண்டு வரப்பட்டது.13 ஆவது திருத்தச்சட்ட மூலம் தமிழினத்தின் முழுமையான தீர்வாக அமையாவிட்டாலும் வடக்கு,கிழக்கு இணைந்த காணி, பொலிஸ் அதிகாரம் நிறைந்த ஒன்றாகவே 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் காணப்பட்டது.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக எதிர்த்த தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியாவின் சினத்திற்கு ஆளாகினர்.



அது இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை செய்யப்படும் அளவில் முடிய, இந்தியாவின் முழு எதிரி ஆனது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு.

இந்த ஒற்றைக் காரணமே தமிழினம் முள்ளிவாய்க்கால் வரை சென்று அழிவுறக் காரணமானது.

தெற்காசியாவின் வல்லரசாக திகழும் இந்தியாவை மீறி இலங்கையில் யாரும் எதுவும் செய்து விட முடியாது.இந்தியா-சீன முறுகலுக்குரிய காரணங்களும் இதுவே. இலங்கையில் ஆழ ஊடுருவி இந்தியாவை அச்சுறுத்த முனைகிறது சீனா. ஆயினும் இந்தியா அதற்கு இடம் கொடாமல் முன்னின்று இலங்கையை கண்காணிப்பதையும் பல்வேறு உதவித் திட்டங்களை மேற்கொள்வதையும் நாம் கண்ணூடாகக் காண முடியும்.

நாட்டில் தேர்தல் ஒன்று நடைபெறும் சாத்தியம் பிரகாசிக்கத் தொடங்கியதும் சர்வதேசத்தின் பார்வை இலங்கை மீது திரும்பத் தொடங்கி விட்டது. பல்வேறு நாட்டு தூதுவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கையின் பொருளாதாரம் தொடர்பிலும் நடைபெறப்போகும் தேர்தல் தொடர்பிலும் கலந்துரையாடி வருகின்றனர்.

நடைபெற்று முடிந்த இந்தியத் தேர்தலில் நரேந்திர மோடி மீண்டும் பிரதமராகிய நிலையில் கடந்த வியாழக்கிழமை இந்திய வெளி விவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

பல்வேறு சந்திப்புக்களை மேற்கொண்ட அவர் தமிழ் கட்சிப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். குறித்த சந்திப்பில் மாவை.சேனாதிராசா த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சி.வி. விக்னேஸ்வரன், எம். ஏ. சுமந்திரன், எஸ். சிறீதரன், செ.கஜேந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர்.ஜெய்சங்கருடன் கலந்துரையாடிய தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளில் செ. கஜேந்திரனைத் தவிர அனைவரும் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை அரசை அறிவுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருந்தனர்.

தொடர்ந்து எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்த ஜெய்சங்கர் 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு வலியுறுத்தியிருந்தார்.

அண்மையில் வடக்கிற்கு விஜயம் செய்திருந்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தான் ஜனாதிபதியானால் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் எனத் தெரிவித்திருந்தார்.

அவரின் குறித்த கருத்துக்கு தென்னிலங்கையில் பலத்த எதிர்ப்புகள் எழுந்த நிலையில் ஜெய்சங்கர் சஜித்தைச் சந்தித்து 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமயாக அமுல்படுத்துமாறு கூறியிருப்பது அரசியல் வட்டத்தில் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு தெற்கில் எதிர்ப்பு உண்டு என்பதை நன்கறிந்த இந்தியா 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை அமுல்படுத்துபவர்களை ஆதரிக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆயினும் இந்தியாவின் குறித்த ஆதரவு தெற்கில் பெரும் எதிர்ப்பலைகளையும் ஏற்படுத்த வாய்ப்புகள் உண்டு.

எதுவாயினும் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையான தமிழர் தீர்வாக தமிழினம் ஏற்றுக் கொள்ளவில்லையாயினும் தற்போதைய இலங்கை அரசியல் நிலவரப்படி கிடைப்பதையேனும் பெற்றுக் கொள்ளலாம் என்ற முடிவே தமிழ் தலைவர்களிடத்தேயும் தமிழினத்திடமும் உண்டு.

இலங்கையில் போர் நிறைவு பெற்று விட்டது. இனி ஒரு போர் தொடங்க வாய்ப்புக்கள் இல்லை என்ற முடிவுக்கு இந்தியா வந்துவிட்டது.இந் நிலையில் இந்தியா இலங்கை மீது முழுமையான கவனம் செலுத்தி தமிழினத்துக்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். நடைபெறப் போகும் தேர்தலை அதற்கான தளமாக இந்தியா கையில் எடுக்க வேண்டும்.

தன்னால் அறிமுகப்படுத்திய 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்தும் வகையில் வழி செய்ய வேண்டும்.இதுவே வஞ்சிக்கப்பட்ட தமிழினத்திற்கு இந்தியா செய்யும் பரிகாரமாக அமையும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:-** ஊடகவியலாளர் பிரதிபன் அவர்களின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதை ஆலடி மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

இத்தகைய செயல்கள் ஊடகத்துறையை அடக்குகின்ற செயலாகும்.

எனவே ஊடகவியலாளர் பிரதீபனின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பண்டிதர் கூற, ஆலடியில் கண்டனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது,தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** எங்கட தமிழர் தாயகத்தில சில ஒழுங்கு நடைமுறைகளை நாங்கள் ஏற்படுத்த வேணும்.இது விடயத்தில எங்கட உள்ளூராட்சி சபைகள் அதீத அக்கறை காட்ட வேணும்.

**கங்காணி:-** உண்மை தான், தெருவில குப்பை கொட்டுறதைக் கூட, நாங்கள் கட்டுப்படுத்தவில்லை. அதோட தெரு நாய்களின்ர தொல்லையும் சொல்லியுமாளாது.

ஆகையால தெரு நாய்களையும் முற்றாகக் கட்டுப்படுத்த வேணும்.

**மூப்பர்:-** தெருவில் குப்பை கொட்டுகிறவர்கள் ஒருக்கால் மற்றவர்களைப் பற்றிச் சிந்தித்தால் அந்த அநியாயமான வேலையை அவர்கள் செய்ய மாட்டார்கள்.


**வாத்தியார்:-** என்னைப் பொறுத்த வரையில, தெருவில குப்பை கொட்டுகிற நாசகாரியத்தைத் தடுக்க வேணும் எண்டால், அது பற்றி பாடசாலை மாணவர்களிட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த வேணும்.

மாணவர்கள் மட்டத்தில விழிப்புணர்வை ஏற்படுத்தினால் தான், இத்தகைய பொறுப்பற்ற செயல்களை முற்றாகத் தடுக்க முடியும்.

**சாத்திரியார்:-** அதோட மாணவர்களிட்ட ஜீவ காருண்யத்தையும் ஏற்படுத்த வேணும். இந்தாப்பாருங்க வீட்டில வளர்த்த நாய்களைத் தெருவில விடுகிற அளவில நிலைமை வந்திட்டுது.

அதோட நாய் குட்டி போட்டதும் பெண் குட்டிகளைக் கொண்டு வந்து சந்தைகளில போட்டிட்டுப் போகினம்.

இப்படியான ஈவிரக்கமற்ற பூலுவத்தனம் இல்லாமல் போக வேணுமெண்டால், ஜீவ காருண்யத்தை ஏற்படுத்துவது கட்டாயமானது.



## ஊடகவியலாளர் மீது அச்சுறுத்தல் ஆலடியில் வன்மையான கண்டனம்

**சிறாப்பர்:-** தெரு நாய்கள் பற்றிச் சொல்லத்தான் ஞாபகம் வருகுது.

இப்ப நாய்களுக்கு பார்வோ (Parvo) என்ற வைரஸ் காய்ச்சல் பரவுதாம். இதால வளர்ப்பு நாய்களும் தெருநாய்களும் கண்டபாட்டில உயிரிழப்பதாக அறிய முடியுது.

**விதானையார்:-** ஓ! நாய் வளர்க்கிறதா இருந்தால் உரிய தடை மருந்துகளைக் கொடுத்து நாய்களை வளர்க்க வேணும். இல்லையெண்டால் எல்லாம் கஷ்ரம் தான்.

**கங்காணி:-** அதுசரி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில தமிழர் தரப்பில பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்க வேணும் எண்ட நிலைப்பாடு எப்படி இருக்குதாம்.

**மூப்பர்:-** இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொழும்புக்கு வந்த போது தமிழ்த் தரப்புக்களை சந்தித்தவர்.

பொது வேட்பாளரை நிறுத்துவதில் தீவிரமாக இருக்கிறீர்களா என்று அவர் கேட்ட போது, பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும் பொது வேட்பாளரை நாங்கள் ஆதரிக்கிறம் எண்டு சொல்ல, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இல்லை, நான் பொது வேட்பாளருக்கு எதிர் எண்டு சொன்னவராம்.

**சிறாப்பர்:-** நல்லது எங்கட தமிழ்த் தரப்பின்ர ஒற்றுமை எப்படி என்பதை அமைச்சர் ஜெய்சங்கர் நன்றாகப் புரிந்து கொண்டிருப்பார் போல.

**சாத்திரியார்:-** தெரியாமல் தான் கேட்கிறன். சிவில் சமூகப் பிரதிநிதிகள் சிலர் சுமந்திரன் எம்பியைச் சந்தித்து, பொது வேட்பாளர் தொடர்பில் கதைத்ததாகவும் அவர் பொது வேட்பாளர் என்பதை ஏற்றுக் கொண்டவர் எண்டும் ஒரு செய்தி பார்த்தனான்.அப்ப அந்தச் செய்தி சரியோ, பிழையோ

**விதானையார்:-** என்னவா இருந்தாலும் பொது வேட்பாளரை ஒத்துக் கொள்வதாக இருந்தால், அதை சுமந்திரன் எம்.பி தான் சொல்ல வேணும். இதைவிட்டிட்டு அவர் சார்பில் சிவில் சமூகம் கருத்துச் சொல்லுறது அவ்வளவு நல்லதல்ல.

**பண்டிதர்:-** நீங்கள் பொது வேட்பாளர் பற்றிக் கதைத்துக் கொண்டிருங்கள். அங்க ரணில் விக்கிரமசிங்க மகிந்த தரப்புச் சாராத வகையில மொட்டுக் கட்சியைத் தன்னோட அணி சேர்த்து ஜனாதிபதித் தேர்தலில போட்டியிடுகிற முயற்சியில் ஈடுபடுவதாகக் கேள்வி.

**கங்காணி:-**அப்ப அங்கயும் காய்க்குள்ள பழமோட தொடங்கியாச்சுது எண்டு சொல்லுறியள்.

**கங்காணி:-** ஓ! காகம் வைத்திருக்கிற வடையைச் சாப்பிட வேணுமெண்டால், காகத்தைப் பாடு எண்டு கேட்கிறது கட்டாயம் தானே.

இவ்வாறு கங்காணி கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**விண்வெளியில் குத்தாட்டம் போட்ட சுனிதா வில்லியம்ஸ் பற்றிக் கூற முடியுமா?**

**மதுவன் மீசாலை**

**நான் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழர்களின் பிரச்சினையை உடன் தீர்ப்பேன் என்கிறாரே சஜித் பிரமேதாஸ?**

இதுவரை இக்கருத்தை பலநூறு சிங்களத் தலைவர்கள் கூறிவிட்டனர். அதனால் இது தொடர்பில் தமிழ் மக்கள் அதிகம் அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.
இதோ அது தருகிறோம் இதோ இது தருகிறோம் என எம்மையும் எம் தலைவர்களையும் ஏமாற்றி எமது வாக்குகளை வாங்கி ஆட்சிப்பீடம் ஏறியவுடன் ஏறிவந்த ஏணிகளை எட்டி உதைத்தவர்கள் எத்தனைபேர்.
அல்ல, தமிழினத்துக்கு ஒரு அங்குல நிலத்தையும் வழங்கமாட்டேன் என மார்தட்டி கூறியவர்கள் எத்தனை பேர்.
பயங்கரவாதிகளுக்கு இந்த நாட்டில் உரிமை இல்லை. இது சிங்கள பௌத்த நாடு என்று இறுமாப்புக் கொண்டவர்கள் எத்தனை பேர்.
இவை அத்தனையையும் கண்டதமிழ் மக்களுக்கு இது ஒரு வியப்பிற்குரிய விடயமல்லவே.

**விஜயதரன் உரும்பிராய்**

**13 ஐ வைத்து தமிழ் மக்களை ஏமாற்றும் நாடகம் ஆரம்பித்து விட்டதே வியாசரே?**

ஏமாற்றுகிறார்கள் என்று தெரிந்து கொண்டு ஏமாறுவதுதான் தமிழினம். இதைத்தான் கண்ணைத் திறந்து கொண்டு கடலில் வீழ்வது என்று சொல்லுவார்கள்.
13 ஆவது திருத்தச் சட்டமூலம் என்பது தமிழ் மக்களால் பூரணமாக ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்று.
தமிழ் மக்களின் அதி உச்ச அதிகாரங்களைக் கொண்டதாக, 13 ஐ தமிழ் மக்கள் ஒரு நாளும் ஏற்றதில்லை.
தமிழ் மக்களினால் சரியான தீர்வாக ஏற்றுக் கொள்ளாத 13 ஐத் தரக்கூட பின்னடிக்கும் சிங்களத் தலைவர்கள் வடக்கில் ஒரு கதையும் தெற்கில் ஒருகதையும் கதைப்பது.
வடிவேலுவின் அது நாறவாய் இது வேறவாய் என்ற நகைச்சுவைக்கு ஒப்பானதே.

**துஷிகரன் வடமராட்சி**

**ரி-20 உலகக் கிண்ணத்தை இம்முறையாவது தென்னாபிரிக்கா வெல்லுமா?**

இம்முறை உலகக்கிண்ணத்தை யார் வெல்லுவார் என்று கணித்து விட முடியாது. அவ்வளவிற்கு அமெரிக்க ஆடுகளங்கள் படுமோசமான நிலையில் உள்ளது
இந்திய பிறீமியர் லீக் போட்டிகளில் மரண அடி அடித்தவர்கள் பந்தை மட்டையில் எடுப்பதற்கே படாத பாடுபடுகிறார்கள்.
பந்து எங்கு வரும் எப்படி வரும் என கணிப்பதற்குள் ஆட்டமிழப்பு நடந்து விடுகிறது.
போட்டியில் 200+ ஓட்டங்களை எடுப்பதென்பது சவாலான ஒன்றாகவே உள்ளது.
நிலை இப்படி இருக்கும்போது வெல்வது யார் என்று கணிப்பது கடினம். ஆயினும் இந்திய அணிக்கு அதிக வாய்ப்புகள் இருப்பது போலத் தெரிகிறது. பொறுத்திருந்து பார்ப்போமே வெல்லப்போவது யார் என்று.





**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**பாலமயூரன் பருத்தித்துறை**

**விண்வெளியில் குத்தாட்டம் போட்ட சுனிதா வில்லியம்ஸ் பற்றிக் கூற முடியுமா?**

பெண்கள் கூட்டம் பேய்கள் என்று பாடல் சொன்ன சித்தர்களே ஈன்ற தாயும் பெண்மை என்று எண்ணிடாத பித்தர்களே...
உலக வளர்ச்சியில் பெண்கள் உச்சத்தில் இருந்தாலும் ஆணாதிக்க சிந்தனை என்ற கோப்பைக்குள் பெண்களை மூழ்கடிக்கவே பார்க்கிறது இந்தப் பெரிய உலகு.
பெண்கள் உரிமை, பெண்கள் சுதந்திரம், பெண்ணடிமை ஒழிப்பு என பக்கம் பக்கமாக மேடையில் வசனம் பேசினாலும் வீட்டில் உணவுக்கு உப்புகாரம் போதவில்லையென்றால் பெண்களை இழிவுபடுத்துபவர்களே இப்போதைய சமூக சீர்திருத்தவாதிகள்.
எதுவானாலும் பெண்மை இன்றி இந்த உலகில் மழையில்லை, காற்றில்லை, நீரில்லை, இயற்கை இல்லை ஏன் உலகே இல்லை.
ஆண் ஆதிக்கம் நிறைந்த உலகிலிருந்து விண் வெளி சென்று அங்கே பெண்மையின் சாதனையை நிலைநாட்டி இருக்கிறார் சுனிதா வில்லியம்ஸ். இதுவே சாதனையின் உச்சம் மாற்றத்தின் தொடக்கம் எனலாம்.



**நான் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழர்களின் பிரச்சினையை உடன் தீர்ப்பென் என்கிறாரே சஜித் பிரமேதாஸ?**

**டனுஷாந்ராசா திருநெல்வேலி**

**ஜனாதிபதித் தேர்தலை வடக்கு-கிழக்கு மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்கிறாரே சட்டத்தரணி சுகாஸ்?**

அது அவரின் தனிப்பட்ட கருத்து. அவர் கட்சியின் கருத்து. அதை அவர் கூறுவதற்கு உரிமையுண்டு.
புறக்கணிக்க வேண்டுமா இல்லையா என்று முடிவெடுக்க வேண்டியது தமிழ் மக்களே.
எதிர்ப்பு அரசியல் செய்வதில் ஒரு பிரச்சினையும் இல்லை. அது பெரும்பான்மை சிங்கள அரசியல்வாதிகளுக்கெதிராக இருந்தால் பரவாயில்லை.
தமிழர் தீர்வு விடயத்திலும் எதிர்ப்பு அரசியல் நடத்துவதென்பது ஒரு நாளும் ஏற்புடையதல்ல.
அவ்வாறு செய்தால் அது தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.
நாம் தமிழ் மக்களின் வாக்குகள் பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள். அதை மனதில் வைத்து நடக்க வேண்டுமல்லவா?

**சுதன் குப்பிளான்**

**தமிழர்களின் தலைவிதி தமிழரசுக் கட்சி என நினைக்க இன்று அதுவே தமிழர்களுக்கு தலையிடியாகிவிட்டதே?**

என்ன செய்வது யாரை தமிழனத்தின் பறிக்கப்பட்ட சுதந்திரத்தைப் பெற்றுத்தருவார்கள் என்று தமிழினம் நம்பியதோ அவர்கள் பதவி மோகம் கொண்டு உண்மை, நேர்மை, நியாயத்தை குழிதோண்டிப் புதைத்துவிட்டு பதவிக்காய் சங்கீதக் கதிரை விளையாடுகிறார்கள்.
குழப்பத்தை ஏற்படுத்துபவர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். நீங்கள் செய்யும் அராஜகங்களையும் அநியாயங்களையும் தமிழினம் மறந்துவிடும் என்று.
ஒரு நாளும் மறவாது. அடுத்த தேர்தல் வரும் போது சிலர் துண்டைகாணோம் துணியைக் காணோம் என்று ஓடுவது நிச்சயம். அப்போது தெரியும் தமிழினம் புத்திசாலிகளா அல்லது முட்டாள்களா என்பது.
இப்போதைக்கு ஆட்டம் போடுங்கள். அடுத்த தேர்தல் வரட்டுமன்.

**இளங்கோ மானிப்பாய்**

**பணம் படைத்தவர்கள் தம் தவறுகளை மறைக்க அப்பாவிகளை தீயவர்களாகக் காட்டுகின்றனரே?**

காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை இரும்புகளை பெரிய முதலைகள் வெட்டி எடுத்து கோடீஸ்வரராகி விட்டார்கள்.
அப்போதெல்லாம் யாரும் எதுவும் பேசவில்லை. ஆனால் இப்போது அங்கு மிச்சம் மீதியாய் கிடக்கும் கறள்பிடித்த இரும்புத் துண்டை எடுப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதைப் பார்க்கும்போது சிரிப்புத் தான் வருகிறது.
இப்படித்தான் பணம்படைத்தவர்கள் எத்தவறையும் செய்யலாம் தவறு செய்தாலும் அதிலிருந்து சாதாரணமாக மீண்டு வந்துவிடலாம்.
ஆனால் அப்பாவிகளை அதில் முழுமையாக மாட்டி விட்டு அழகு பார்ப்பார்கள். இதைத்தான் இளநீர் குடித்தவன் ஓடிவிட கோம்பை சூப்பியவன் அகப்பட்டான் என்று கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : நாளை நமதே (1974)
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
வரிகள் : கண்ணதாசன்



அன்பு மலர்களே நம்பி இருங்களே
நாளை நமதே இந்த நாளும் நமதே
த்ர்மம் உலகிலே இருக்கும் வரையிலே
நாளை நமதே எந்த நாளும் நமதே

தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம்
ஓர் வழி நின்று நேர் வழி சென்றால்
நாளை நமதே...

காலங்கள் என்னும் சோலைகள் மலர்ந்து காய் கனியாகும்
நமக்கென வளர்ந்து

நாளை நமதே நாளை நமதே நாளை நமதே
நாளை நமதே நாளை நமதே நாளை நமதே நாளை நமதே

பாசம் என்னும் ஊர் வழி வந்து பாசமலர் கூட்டம்
ஆடும் மழையில் அமைவது தானே வாழ்க்கை பூந்தோட்டம்

மூன்று தமிழும் ஓர் இடம் நின்று
பாடவேண்டும் காவியச் சிந்து

அந்த நாள் நினைவுகள் எந்த நாளும் மாறாது
அந்த நாள் நினைவுகள் எந்த நாளும் மாறாது

நாளை நமதே, நாளை நமதே

வீடு என்னும் கோயிலில் வைத்த வெள்ளி தீபங்களே
நல்ல குடும்பம் ஒளிமயமாக வெளிச்சம் தாருங்களே

நாடும் வீடும் உங்களை நம்பி நீங்கள்தானே அண்ணன் தம்பி
எதையுமே தாங்கிடும் இதயம் என்றும் மாறாது

நாளை நமதே நாளை நமதே

தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம்
ஓர் வழி நின்று நேர் வழி சென்றால்
நாளை நமதே...

காலங்கள் என்னும் சோலைகள் மலர்ந்து காய் கனியாகும்
நமக்கென வளர்ந்து

நாளை நமதே நாளை நமதே நாளை நமதே

## -குழந்தை தேவையில்லை-
# தவிர்க்கும் இளையதலைமுறை தடுமாறும் உலக நாடுகள்

உலகெங்குமே குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதில் ஈடுபாடு குறைய ஆரம்பித்துள்ளது.

இதையடுத்து 'மூன்று குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்', 'எத்தனை குழந்தை வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று உலகின் பல நாடுகளில் புது கோஷம் ஒலிக்க ஆரம்பித்துள்ளது.

ஆம்... ஒருபுறம் சிங்கப்பூர் பிரதமர் சீனப் புத்தாண்டு அறிக்கையில், 'ஒரு சின்ன டிராகனை' உங்கள் குடும்பத்தோடு சேருங்கள்' என்கிறார். மறு புறமோ, வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் அதே கோரிக்கையை கண்ணீரோடு முன்வைத்த வீடியோ வைரலாகிறது.

தென்கொரிய மேயர்கள், இளம் தலைமுறையினர் தங்களுக்குப் பொருத்தமான இணையைக் கண்டறியும் மேளாக்களை நடத்த, இத்தாலியோ பிறப்பு விகிதத்தைப் பற்றிய மாநாட்டில் போப் ஆண்டவரையே உரை ஆற்றவைக்கிறது.

என்னதான் நடக்கிறது? உலக மக்கள் தொகை தொடர்ந்து ஏறுமுகத்திலேயே இருந்தும் கூட, இந்தளவுக்கு பல நாடுகளும் இதுகுறித்து கவலை கொள்வதற்கான காரணம் என்ன?

### 2050 இல் என்ன ஆகும்?

உலகில் ஒரு விநாடிக்கு சராசரியாக இரு மரணங்கள் நேர்கின்றன என்பதால், அதை ஈடுசெய்ய பிறப்பு விகிதம் குறைந்தபட்சம் 2.1இற்கு மேலாக இருக்க வேண்டும் என்பது பொது விதி. ஆனால், 195இற்குப் பின் இது பெரும்பாலான நாடுகளிலும் குறையத் தொடங்கி, சில நாடுகளில் தற்போது 1.5இற்கும் கீழிறங்கி பயங்காட்டுகிறது. வளர்ந்த, வளரும் நாடுகள் என்ற பாகுபாடின்றி சகல நாடுகளையும் இதுகுறித்த கவலை ஆட்டிவைக்கிறது

### பிறப்பு விகிதம் குறைந்தால்..?

பிறப்பு விகிதம் சரிவதால் மக்கள்தொகை அதிகரிக்கும் வேகம் கட்டுப்படுத்தப்படும். உதாரணமாக ஒரு நாட்ல் பிறப்பு விகிதம் 2.03. இது தொடர்ந்து குறைவதால், 2060 இற்குப் பின் மக்கள்தொகை அதிகரிக்காமல் ஏறக்குறைய அதே எண்ணிக்கையோடு தொடர்ந்து, 2100-இற்குப் பின் குறையக்கூட வாய்ப்புள்ளது.

நல்லதுதானே என ஒரு நொடி மனதிற்குள் மின்னலாகத் தோன்றி மறைந்ததா? கார்பன் வெளியீடு குறைந்து வளிமண்டலம் நிம்மதியாக மூச்சுவிடும், வளங்களைப் பங்கிடுவதில் உள்ள சச்சரவுகள் குறையும், உணவுக்கான பாதுகாப்பில் இருந்து ஆரோக்கியமான வாழ்விற்கான உத்தரவாதம் வரை எல்லோருக்கும் எல்லாமே கிடைக்கும் என்பதுதான் முதல் பார்வையில் பலருக்கும் தோன்றுவது. உண்மையில், பிறப்பு விகிதம் குறைவதில் சாதகங்களைவிட பாதகங்களே அதிகம்.

பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை குறையக் குறைய, ஒட்டுமொத்த மக்கள் தொகையில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இப்போதே, ஜப்பானில் மூவரில் ஒருவர் முதியவர்தான். இளம் வயதினரின் எண்ணிக்கை குறைவது, நாட்டின் மனித வளத்தை பாதித்து, பல துறைகளிலும் தேக்கத்தை உண்டாக்கும்.

### ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காரணம்!

பிறப்பு விகிதம் சரிவதற்தான காரணங்களை பகுப்பாய்ந்தால், ஒவ்வொரு நாட்டின் பிரச்னையும் வெவ்வேறானதாக இருப்பினும், வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றமே முதன்மையானது என்பது புரியும். தென்கொரியாவில் இன்னமும் ஆணாதிக்கம் முழுவதுமாக மட்டுப்படாத காரணத்தால், பொருளாதார சுதந்திரம் உள்ள பெண்கள் திருமண பந்தத்திற்குள் சிறைப்படுவதையோ, குழந்தைப்பேறு என்ற பெயரில் தங்களது கால்களுக்கு விலங்கிடப்படுவதையோ விரும்பவில்லை.

ஜப்பானில், 2022 ஐ விட 2023இல் 5.9% குறைவாகவே திருமணங்கள் நடந்திருக்கின்றன. சிங்கப்பூரிலோ, வாழ்வை நடத்துவதற்கான செலவுகள் அதிகமென்பதால், பிறப்பின் எண்ணிக்கையைக் தாங்களாகவே குறைத்துள்ளனர்.

அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி போன்ற வளர்ந்த நாடுகளில் தம்பதி இருவருமே வேலைக்குச் செல்வதால் குழந்தை பராமரிப்பில் உள்ள சிரமங்கள் குழந்தைப்பேற்றினை தள்ளிப்போட அல்லது தவிர்க்க வைக்கிறது.

இலங்கை இந்தியா போன்ற வளரும் நாடுகளிலோ, கல்வியறிவு பெறுவது, நல்ல வேலை மற்றும் சம்பளம் என்ற இலக்கை நோக்கிப் பயணிப்பது என கவனம் அதன் பக்கம் திரும்பியிருக்கிறது.

### தீர்வு என்ன..?

இந்தப் பிரச்சினைக்கான ஆணிவேர்களை பல நாடுகளும் அறிந்திருந்தாலும், தீர்வுகள் சுலபமானதல்ல. சிங்கப்பூர் ஓய்வுபெறும் வயதை 64 ஆக அதிகரிக்க இருக்கிறது. இது பேருக்குத்தானே ஒழிய, 90ஐயும் கடந்து இயலும்வரை வேலை பார்க்கின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆசிய நாடுகளில் பெரும்பாலானவை பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதிலேயே கவனம் வைக்கின்றன. சலுகைகள், வரிவிலக்கு, சம்பளத்தோடு பெற்றோர் இருவருக்கும் பிரசவகால விடுமுறை, வேலைநேரங்களில் விருப்பப்படி மாற்றம், சம்பள உயர்வு எனப் பலவழிகளிலும் முயற்சி செய்கின்றன.

முன்னர், 'ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக் கொள்ளக்கூடாது' எனக் கூறி, அதற்காக கட்டாயக் கருக்கலைப்பைக்கூட கையிலெடுத்த சீனா தற்போது, மூன்று குழந்தைகள் வரை பெற்றுக் கொள்ளுங்கள்' என்கிறது.


### இனி என்ன..?

'வேலை காலியில்லை', இறந்த காலம். தகுதியான ஆள்கள் கிடைக்கவில்லை' - நிகழ்காலம். 'ஆளே கிடைக்கவில்லை' என்பது எதிர்காலமாக இருக்கலாம். இதற்கான தீர் வாக செயற்கை நுண்ணறிவு மற்றும் தானியங்கிகளின் பக்கமாக நகரலாமா என்பது கூட சில நாடுகளின் கருத்து. ஒரு நாட்டில் ஏற்படவிருக்கும் பாதிப்பு, உலகம் முழுவதும்கூட தனது தாக்கத்தை பொருளாதார ரீதியாகவும், பிற வழிகளிலும் உணர வைக்கும் என்பதால், இது உலகளாவிய பிரச்சினை. முறையான நிபுணர் குழுவின் சரியான திட்டமிடலே தற்போதைய அவசரத் தேவை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சேமிப்பைத் தடுக்கும் செலவு மனநிலை...



நாம் சிறிதேனும் சேமிக்க வேண்டும் என்று நினைக்கும் போது, "இந்த மாதம் நிறைய செலவு இருக்கு அடுத்த மாதம் முதல் சேமிப்போம். அதற்குள் செலவுகளும் குறைந்து, வருமானமும் கூடும் வாய்ப்பு உள்ளது" என நமக்கு நாமே ஆறுதல் கூறிக்கொண்டு, சேமிப்பதை முடிந்தவரை தள்ளிப் போடுவோம்.

**சேமிக்க முடியாததற்கான காரணம்...**

நாமும் வசதியாக, ஆடம்பரமாக வாழ வேண்டும் என்று நினைக்கும் நம் எண்ணமே, நம்முடைய வருமானத்தைச் சேமிக்க விடாமல் தடுக்கும் சக்தியாக உள்ளது. நாம் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவோ, கூடுதலாகவோ வருமானம் கிடைத்துவிட்டால், உடனே, நாம் உலகைப் பார்க்கும் விதமே மாறிவிடுகிறது. நம்மைவிட வசதியான நண்பர்கள் உறவினர் களிடம் இருப்பதைப் போன்ற பொருள்கள் அல்லது அவற்றைவிட உயர்ந்த, விலை அதிகமான பொருள்களை வாங்கிவிட வேண்டும் என்கிற எண்ணத்தில் தேவை இல்லாத பொருள்களை வாங்கிக் குவிக்கிறோம்.

**செலவுகளைக் குறைப்பது எப்படி?**

இன்றைய காலகட்டத்தில், எந்தச் செலவை யும் குறைப்பது கடினம். வருமானம் அதிகரிக்க அதிகரிக்க செலவுகளும் கூடவே அதிகரிக்கும். வருமானம் ஏற செலவுகளும் ஏறும் என்பதை மறுக்க முடியாது.

செலவுகளைக் குறைக்க, கடைகளுக்கு செல்லும்முன் என்னென்ன பொருள்களை வாங்க வேண்டும், எந்த பட்ஜெட்டுக்குள் வாங்க வேண்டும்.

**நிதி இலக்குகள் ஏன் அவசியம் ?**

செலவுகளைக் குறைக்கச் சொன்னால், யாருக்கும் அதைக் கேட்க மனம் வராது. ஆனால், செலவுகளை ஏன் குறைக்க வேண்டும் என்பதை ஒருவர் உணர்ந்தால், செலவுகளைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்வார்.

திருமணமான ஒவ்வொரு வருக்கும் இன்றி யமையாத நிதி இலக்கில் சில...

1. குழந்தைகளின் கல்வி.
2. குழந்தைகளின் திருமணம்.
3. ஓய்வுக்கால பணம்.

இவை அல்லாத பல இலக்குகளும் இருக்கக் கூடும். இந்த இலக்குகளை நிறைவேற்றத்தான் நாம் பணத்தைச் சேமித்து, முதலீடு செய்யத் தொடங்க வேண்டும். 'சிறு துளி பெருவெள்ளம்' என்பது போல, சின்னச் சின்ன சேமிப்பே குறிப்பிட்ட காலத்தில் மிகப் பெரிய தொகையாக வளர்ந்திருக்கும். இன்று முதல் வருமானத்தில் ஒரு சிறு பகுதியைச் சேமிக்க ஆரம்பித்தாலே போதும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் பிரமிக்கும் அளவுக்கு அது பன்மடங்காக வளரும்.

**அவசரத் தேவைக்கான முதலீடு...**

நாம் முதலீடு செய்ய வேண்டும் என நினைக்கும் நேரத் தில் தான் ஏதாவது ஓர் எதிர் பாராத செலவு வந்து நம்மை முதலீடு செய்யவிடாமல் தடுக் கும். நமக்கும் முதலீடு செய்யும் எண்ணம் மறந்தே போய் விடும். எனவே, அவசரத் தேவைக்கான முதலீடாக, வருமானத்தின், ஆறு மாத தொகை யைக் கையிருப்பாக கையிருப்பில் நிரந்தரமாக வைத்துக்கொள்வது மிகவும் அவசியம்.

மாத வருமானத்தில் 10% தனி வங்கி சேமிப்புக் கணக்கில் சேமிக்கப் பழகிவிட்டால், நாளடைவில், 15%, 20% என உயர்த்திவிடலாம். சேமிக்கும் பழக்கத்தை ஒரே நாளில் உருவாக்கிவிட முடியாது. ஆனால், படிப்படியாக முயற்சி செய்தால், நிச்சயம் பெரிதாக சேமித்துப் பயன் பெறலாம்!

# மகன் தந்தைக்காற்றும்...



அவர் ஒரு விவசாயி. வயதாகிவிட்டது. இனியும் வேலை பார்க்க முடியாது என்ற நிலையில் வயலுக்குப் போவதை நிறுத்திக் கொண்டார்.

காலையில் எழுந்து ஊருக்குப் பொதுவாக இருந்த ஒரு மண்டபத்துக்குப் போவார். அங்கேயே உட்கார்ந்துகொள்வார். மாலை வரை இருந்துவிட்டு வீட்டுக்குத் திரும்புவார்.

இப்போது குடும்பச் சுமை முழுவதும் அவருடைய மகனின் தலையில் விழுந்திருந்தது. வயலுக்குப் போகும் மகன், மண்டபத்தில் அவரைப் பார்ப்பான். எரிச்சலும் கோபமும் எழும்.

ஒருநாள் ஹஇனியும் இவரால் ஒரு பயனும் இல்லை' என்ற முடிவுக்கு வந்தான். ஒரு மர சவப்பெட்டியை மண்டபத்துக்கருகே எடுத்து வந்தான். மூடியைத் திறந்தான். விவசாயி புரிந்துகொண்டார். ஒன்றும் பேசாமல் பெட்டிக்குள் ஏறிப் படுத்துக் கொண்டார். மகன், பெட்டியை இழுத்துக்கொண்டு ஒரு மலை உச்சிக்குப் போனான். அவன் என்ன செய்யப் போகிறான் என்பது அவருக்குப் புரிந்தது. சவப் பெட்டியை பலம்கொண்ட மட்டும் தட்டினார். மகன் பெட்டியைத் திறந்தான்.

"மகனே... நீ என்னை மலையில ருந்து தூக்கி எறியப்போறேன்னு எனக்குத் தெரியுது. ஒண்ணு சொல்றேன், கேப்பியா?"

"என்ன?"

"சவப்பெடியோட என்னை தூக்கி எறியாதே...என்னை மட்டும் தூக்கிப்போடு. அந்த சவப்பெட்டி உன் பிள்ளைங்களுக்குப் பயன்படும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிதம் இழந்த இனம்

தூங்காமல் துக்கங்கள் தாங்காமல் தகைக்கின்றோம்
எட்டாத இமயத்திற்கு ஏணிகளுக்காக ஏங்குகின்றோம்
பகட்டாக வாழ நினைத்து பண்பாட்டை இழந்து விட்டோம்
வறுமையால் கிழிந்த சட்டையைப் பெருமைக்காக
கிழித்து விட்டோம்நினைவுக் கஞ்சியைப் பகிர்ந்தவர்கள்
கஞ்சாச் செடியை நுகர்ந்து கொண்டோம் தாயகத்திற்காக
கூழயவர்கள் தண்ணியடிக்க கூடிக் கொண்டோம்
நகங்களை வெட்டியவர்கள்
கைகளை அறுத்துக் கொண்டோம்
வடம் பிடித்த கைகளால் வாளைப் பிடித்துக் கொண்டோம்
துலாவில் மிதித்தவர்கள்
அடுத்தவன் விலாவில் குத்திக் கொண்டோம்
தன்மானத் தமிழர்களாம்! நாம்
தலை குனிந்து கொண்டோம்!!

கவிக்காதலன், சுபத்தி.



# மனிதம் வெல்லும்

காவியம் மண்ணில் தோன்ற
கற்பனை வளமே போதும்
சொற்களைப் புணர்த்திச் சொர்க்கம்
படைத்திடல் மட்டும் வேண்டாம்

மனிதனை விதியா வெல்லும்
விதிகளை மதியா வெல்லும்? என்ற
கதிதனை உணர்ந்தால் இங்கு
கவலையை மனிதன் வெல்வான்

கவலைகள் தம்மை வென்றால்
கனவுகள் எங்கே செல்லும்?
திவலையாய் சிதறி மண்ணில்
ஒழிந்திட மனிதம் வாழும்

கற்பனை கடந்த வாழ்வை
கருதினால் பெறலாம் மண்ணில்
விற்பனர் மேடை வேண்டாம்
விளங்கிடு மனிதம் வெல்லும்

மானிடம் வாழ்வை வென்றால்
வதைகளுக்கிடம் தான் ஏது?
மானுடம் கனவில் வீழ்ந்தால்
மனிதனை மரணம் வெல்லும்.

**வளவை வளவன்.**

# உன் மீது கொண்ட காதல்



யார் வலிகள் தந்தாலும்
அனைத்துக்குமான மருந்து
நீ மட்டுமே எனக்கு

நீ எத் தொலைவுக்கு சென்றாலும்
என் நினைவின்றி நீயில்லை
என்பதே நம் காதலின் வெற்றிதான்

என் கண்களின் ஜீவன் உன்னில்
நீ தெளிவாகத்தான் உரையாடிக்கொண்டிருக்கிறாய்
நான் தான்உளறிக் கொண்டிருக்கிறேன்
மனதுக்குள் உன்னோடு
காதலில்

இருளுக்குள் அடைக்கலம்
கொண்ட ஒளியாய் தேடுகிறேன்
நானும் உன்னில்அடைக்கலம்

ஆனந்தமோ ஆதங்கமோ
என் கண்ணீரும் உனக்காக மட்டுமே
எப்போதுமே

**ராஜி,**
**உரும்பிராய்.**

# மௌனத்தின் தேடல்- 721



## மனிதம் இறக்கவில்லை

தலை நரைத்து உடல் தளர்ந்து
வயோதிகம் வந்து வறுமை வாட்ட
உறவும் துரத்த வீதிக்கு வந்தபோது
நாயிலும் கேவலமாகி உண்ண உணவு
குடிக்கத் தண்ணீர் இன்றித் தவிர்த்து
பேயோ மனிதமோ என்று
பிரிக்முடியாது கிடந்த என்னை
யாரோ ஒரு பெண் அணைத்து
அன்னமூட்ட உலகில்
இன்னும் மனிதம் இறக்கவில்லை
என என் உள்மனம் சொன்னது.

பிரமா. யதுர்சன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# மௌனத்தின் தேடல்- 722



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஏனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## தர்மம் காக்கும் மங்கை

வயோதிப மாதுவிற்கு உணவூட்டும்
இளம் தங்கையே
உன் தர்ம குணம் உயர்ந்தது அம்மா!
தாய்மை காணாத பருவப் பெண் நீயம்மா
பாட்டிக்கு சோறூட்டும் கைங்கரியம்
உன்னை உயர்ந்தவள் என
சொல்லாமல் சொல்கிறது
வாழ்க உன் தர்ம செயல்
உன் செயல் கண்டு
ஏனையமங்கையர்கள்
விழித்துக் கொள்வார்களா
இல்லை ஏளனம் புரிவார்களா?

அபிகுலமாலிகா, சித்தன்கேணி.

## முதிசங்களைப் பேணுவோம்

பெண்ணாய் பிறந்து விட்ட போதினிலே
பெருமை தன்னை பேசிட வேண்டியே
பிள்ளையாய் சகோதரியாய்
மனைவியாய் மருமகளாய் தாயாக இருந்தே
கடமையை
மாட்டுப் பெண்ணாய் நானும்
குடும்ப நலனுக்காய் உள்ளம் உருகி
உடலும் தேய்ந்து மெழுகுவர்த்தியாய்
உருகி ஒளி வீசி தன்னுயிர் ஈந்தேன்
காவோலை விழ குருத்தோலை சிரிக்கும்
காலமதில்
காருண்யம் இன்னும் வாழ்கின்றதே என்பதை
முதுமை வந்திட்ட வேளை
முதியோர் இல்லத்தில் இணைக்காது
இணை பிரியா அன்பை செலுத்தி
இன்பமாய் உணவூட்டி
நன்றிக் கடன் தன்னை செலுத்தும்
இப்பிள்ளையினை போற்றுவோம்

ஆ. செல்வி, திருநாவலூர்.

## கண்ணில் அன்னை திரேசா

அரைக்கொத்த அரிசி அன்னதானத்திற்கு
விடிய விடிய மேள தாளமின்று
விளம்பரத்திற்காக தர்ம வள்ளல்கள்
படத்தைப் பிடித்து போடும் போது
முன் பின் தெரியாத அநாதைக் கிழவியை
தாயாய்க் கருதி அன்னமூட்டும் உன்னை
பார்க்கும் போது அன்னை திரேசா
எம் கண்ணில் காட்சி அளித்தாள்

பி.மதுஷ்சன், தையிட்டி.

## நமது கடமை

நாம் உதவினால்
நமக்கு உதவி கிடைக்கும்
இன்று மட்டுமே இளமை
நாளை நமக்கும்
இதே நிலைமை
முழு மனதுடன் உதவினால்
முதியோர் இல்லங்களுக்கு
மூடு விழா

துணவியூர் நடா.

## பெற்றால் தான் பிள்ளையா

பரட்டைத் தலையும் பஞ்சப் பரதேசிக்
கோலமுமாய் அநாதரவாய் அலைந்து
திரியும் தாயே- கலங்காதே உனை
அன்புக்கரம் நீட்டி அரவணைத்து சோறூட்டி
அன்புடன் பாதுகாத்து பராமரிக்கும்
இவளும் உனது மகள்தான் தாயே

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

## எதிரும் புதிரும்

தேடிச் சோறு தினம் தின்று சின்னஞ்சிறு கதை பேசி
என்றும் பாரதியின் பாடலுக்கு எதிர்மறையாய்
தேடிச் சென்று உணவை ஊட்டி விடும் செயல்
உணர்வில் சிகரத்தைத் தொடும்
இது மனித நேயத்தின் வளர்ச்சி
மறுபுறத்தில் எல்லை மீறி
கடுகதியில் காசாவில் நடப்பது கடைந்தெடுத்த காடைத்தனம்

க. நாகராசா,துணாவில்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




இலங்கையின் இறுதிப் பிரதேசமான யாப்னாப் பட்டினத்தை இன்று கைப் பற்றினோம். ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையும் யாப்னாக் கோட்டையும் இலகுவில் எங்களால் கைப் பற்றப்பட்டன. இச்சண்டையில் எதிரிகள் பக்கத்தில் 117 பேர் கடற்கோட்டையிலும். 700 பேர் யாப்னாக் கோட்டையிலும் கொல்லப்பட்டனர். 800 பேரைக் கைதிகளாக்கியுள்ளோம். எங்கள் தரப்பில் 98 ஒல்லாந்தர் இறந்தனர். 100 பேர்வரையில் கூலிப்படையில் இறந்தனர். 23 பேர் கடும் காயமடைந்தனர்.

யாப்னாப் பட்டினம் வளமானது. அரிசி, பருத்தி சாயவேர், யானைகள், உப்பு என்பன இப்பட்டினத்திலுள்ளன. சுதேசிகள் சிறிய உருவத்தினர், பணிவானவர்கள். அவர்களில் பலர் விவசாயிகளாகவும் நெசவாளர்களாகவும் சாயம் போடுபவர்களாகவும் உள்ளனர். அடங்கி வாழப் பழக்கப்பட்டவர்கள்.

கோட்டைக்குள் கைதானவர்கள் எப்பொருளையும் எடுத்துச் செல்ல நான் அனுமதிக்கவில்லை. கோட்டையைக் கைப்பற்றியபோது அகப்பட்ட பொருட்களை ஒல்லாந்தக் கம்பனிக்குரியனவாகப் பதிவேட்டில் பதிந்து பேணியுள்ளேன். சாயவேர் பல சாக்குகளில் அகப்பட்டன. 340 அடிமைகள் கிடைத்தனர். 30 ஆயிரம் பற்றாகோஸ் பெறுமதியான தங்கம், வெள்ளி ஆபரணங்கள் கொண்ட சிறுபுதையல் ஒன்றும் கோட்டைக்குள் அகப்பட்டது.

“முஸ்லீம் வர்த்தகர்களுக்கு விற்பதற்காக ஆனைப்பந்தியில் கட்டிவைக்கப்பட்டிருந்த 27 யானைகளையும் எமக்குரியதாக்கி விட்டேன். இந்த யானைகளுக்குப் போர்த்துக்கேயர் மதித்திருக்கும் விலை குறைவு. இவற்றினை முஸ்லீம் வர்த்தகர்களுக்கு நல்ல விலையில் விற்கவுள்ளேன். அத்துடன் இவற்றுள் 10 யானைகளைச் சோழ மண்டலக் கவனர் பிற்றிற்கு அனுப்பவுள்ளேன்.

“எங்களுக்குப் பீரங்கிக் குண்டுகள் தேவை.12 தொட்டு 24 இறாத்தல் நிறையுள்ள குண்டுகளில் 3000 அனுப் பிவைக்கவும். 2 இறாத்தல் தொட்டு 4 இறாத்தல் நிறை வரையிலான குண்டுகளில் 2000 அனுப்பிவைக்கவும். பத்தேவியாவிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட துப்பாக்கி மருந்துகள் சிறந்ததாகவிருந்தது. இனிமேல் யாப்னா பட்டினத்திலேயே கண்பவுடரைத் தயாரிக்கலாம் என நினைக்கிறேன்.

ரைக்ளோப் வன் ஊன்ஸ்

“பார்ப்பதற்கு அழகான விதவைப் பெண்களையும் கலியாண கன்னிப் பெண்களையும் இங்கு தடுத்து வைத்துள்ளேன்.

(தொடரும்...)

# கடல் புறா




ஆனால் வேறு யாரிடமும் அதை ஒப்படைக்க எனக்குத் தைரியமில்லை, என்றான்.

புரிகிறது என்பதற்கு அடையாளமாகத் தலையை மட்டும் அசைத்தான் அமீர்.

குறுவாள்கள் உனக்கு அதிகம் தேவையாயிருக்கும் என்று சுட்டிக் காட்டினான் இளைய பல்லவன்.

குறுவாள்களைப் பற்றிப் பிரஸ்தாபம் வந்ததும் அமீரின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. “தேவையானதை நமது மரக்கலத்திலிருந்து எடுத்துக் கொள்கிறேன். மேலும் தேவையாயிருக்குமானால் இங்கு பட்டறை களில் தயாரித்துக் கொள்கிறேன்” என்றான் அமீர் தன் பெரு உதடுகளை விரித்துப் புன்முறுவல்செய்து.

பகிட்பாரிஸான் மலைக்காட்டுப் பகுதியை நீ பாதுகாக்க வேண்டும்” என்றான் இளையபல்லவன்.

“முன்பே தெரிந்ததுதான்” என்றான் அமீர்.

“நினைப்பூட்டவே மீண்டும் சொன்னேன்.” என்றான் இளைய பல்லவன்.

ஆபத்தை இனிப்புப் பண்டம் போல் வரவேற்கும் சுபாவமுடைய அரபு நாட்டு அமீரின் பெருவிழிகள் மகிழ்ச்சியைக் கக்கின. “உம்” என்று எழுந்து ஆமோதிப்புக் குரலிலும் உற்சாகம் இருந்தது.

“அந்தப் பகுதியில் கண்ணோட்டம் வைக்க எத்தனை வீரர்கள் தேவை?” என்று கேட்டான் இளைய பல்லவன்.

“இருபது பேர் போதும்” என்றான் அமீர்.

அமீரின் திறமையையும் முன் யோசனையையும் உள்ளூர வியந்தான் இளையபல்லன். அதிகப்படி வீரர்களை அந்தப் பகுதியில் நடமாட விட்டால், பூர்வக்குடிகள் எச்சரிக்கையடையலாம். ஊருக்குள் புக வேறு முறைகளைக் கையாளலாம். அதைத் தவிர்க்கவே அமீர் குறைந்த வீரர்களைக் கொண்டு அப்பகுதியைக் கண் காணிக்க முயலுகிறான்” என்று தனக்குள் சொல்லிக் கொண்ட இளையபல்லவன், “அப்படியானால் உனக்கு நமது மரக்கலம் ஊதும் கொம்புகளில் ஒன்று தேவையாயிருக்கும்” என்றான்.

“ஆம் ஒன்று எனக்கு, இன்னொன்று உங்களுக்கு” என்றான் அமீர்.

“நம்மிருவர் கொம்புகளில் எது ஊதப்படுகிறதோ அங்கு வீரர்கள் விரைந்தால் போதும்” என்று ஆமோதித்த படைத்தலைவன் அத்துடன் தனது உத்தரவுகளை முடித்துக் கொண்டான்.

## பாதுகாப்பு ஏற்பாடுகள்

மறுநாள் முதற்கொண்டு கோட்டைப் பாதுகாப்பு வேலைகள் மும்முரமாகத் தொடங்கின. இரும்புப் பட்டறைகளில் பெரு வேல்களும், வேல்களை வீசும் இரும்பு விற்களும் குறுவாள்களும் அடித்தும் வளைத்தும் தீட்டப்பட்டும் தயாராகிக் கொண்டிருந்தன. கடற்புற மதில் மேலிருந்த காவல் வீரரும் விஷ அம்பு எய்யும் வில்லாளிகளும் குறைக்கப்பட்டு மதில் சுவரின் இடையிடையே இருந்த காவற்கூடங்களில் மட்டும் வீரர்கள் பத்துப் பத்துப்பேர் நிற்க வைக்கப்பட்டனர்.

எதிர்ப்பு ஏற்பாட்டால் சுவர்களில் ஏணி போட்டு ஏறவும், எண்ணெய்க் குடங்களைத் தீயிட்டுக் கவிழ்க்கவும் நகரவாசிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. கிழக்கு மேற்கு வாயில்களைக் காக்க நியமிக்கப்பட்ட இரு உபதலைவர்களும் காவலை மிகவும் வலுப்படுத்தினர். மற்ற நான்கு உபதலைவர்கள் மக்களுக்குப் பயிற்சியளித்தனர். மேற்கு வாசலிலிருந்து கடற்கரையை ஒட்டிய வண்ணம் ஸ்ரீ விஜயத்தலைநகருக்கு ஓடிய பாதை மூலம் வண்டிகள் பக்க நகரங்களுக்கு அனுப்பப்பட்டு உணவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன.

பகிட்பாரிஸான் மலைக்காட்டுப் பகுதியைக் கவனிக்க மதில்சுவர் தளத்திலிருந்த காவற் கூடத்தையே தனது அறையாக அமைத்துக் கொண்ட அமீர் இருபது வீரர்களை மட்டும் துணை கொண்டு இரவும் பகலும் அந்த மதில்மீது தானே சஞ்சரித்து வந்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

405

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# இயற்கை என்ற இனிய வைத்தியன்

இயற்கையை இறைவனாகச் சித்தரித்து வழிபடும் மரபு அன்று தொட்டு இருந்துவருகின்றது. அந்த இயற்கை என்ற இறைவன் வைத்தியத்திலே விற்பன்னனாக இருப்பதால் அந்த இறைவனுக்கு வைத்தீஸ்வரன் என்றும் ஒரு பெயர் இருக்கிறது. நோய்த்தடுப்புக்கும் நோய் குணமாக்கலுக்கும் அடி நாதமாய் விளங்கும் இயற்கை மூலமாகக் கிடைக்கும் வளங்களை அசட்டைசெய்து செயற்கையான பொருட்களின் கால்களிலே நாம் முற்றாக சரணாகதி அடைந்துகொண்டிருக்கிறோம். அதனால் நோய்வாய்ப் பட்டுக் கொண்டிருக்கிறோம்.

வாழ்க்கை செயற்கைத்தனமாகி, இயந்திரமாகி, உணவு வகைகள் கூட பைக்கற்றுகளிலும் பேணிகளிலும் வருகின்ற இரசாயன உணவுகளாக மாறி, பானங்கள் எல்லாம் போத்தலில் வருகின்ற செயற்கை சுவையூட்டிகளின் கல்வையாகி, மீசை வெட்டுவதற்குக்கூட மிசின் தேவை என்று ஆகி, எமது உடற் பயிற்சிகள் இயந்திரங்களில் என்று ஆகி, எங்கள் புன்னகைகளும் நன்றி தெரிவிப்புகளும் உதட்டளவில் வரும் செயற்கை உபசாரமாக மாறி, இயற்கையிலிருந்து நாம் அந்நியப்பட்டு சென்றுகொண்டிருக்கிறோம்.

இயற்கையான, சுத்தமான காற்று பல நோய்களை மாற்றும். நுரையீரலைப் பாதுகாத்து பல நோய்களைத் தடுக்கும். காற்றுக்காலம் தொடங்கியதும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவது இதற்கு ஒரு நல்ல சான்று. இயற்கையான காற்றுக்கு கதவடைப்பு செய்து பூட்டிய அறை யினுள் செயற்கை மின்விசிறியை சுற்றவிட்டு, சுற்றி வரும் அசுத்தக் காற்றை சுவாசித்து நோயை விலை கொடுத்து வாங்கும் வில்லங்க வாழ்வு அரங்கேறிக் கொண்டிருப்பது ஏன்?

சாதாரண தடிமன், காய்ச்சல், தலையிடி, தசைப்பிடிப்பு, வயிற்றுக்குழப்பம் போன்றவை மருந்துகள் எதுவுமின்றி இயற்கையாக மாறக்கூடியவை. சிறு சிறு அறிகுறிகளுக்கெல்லாம் மருந்து பாவிக்க நினைப்பது நல்லதல்ல. அவற்றை தானாக மாறவிடுவது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது. பூப்பறிப்பதற்கு ஏன் கோடாரியைத் தூக்கவேண்டும்? இயற்கையில் மாறக்கூடிய நோய்களுக்கு ஏன் மாத்திரைகளைக் கையில் எடுக்கவேண்டும்?

இயற்கையை இரசிக்கும் பழக்கம் பல நோய்களைத் தீர்க்கவும் தடுக்கவும் வல்லது. பச்சைப் புற்தரையை, பஞ்சுபோன்ற முகில்களை, வீசும் காற்றை, விடிகாலைப் பொழுதை, பள்ளிசெல்லும் சிறார்களை, பறக்கும் குருவிகளை, பாட்டனின் பழங்கதையை, பாட்டியின் புறுபுறுப்பை, மலரும் பூக்களை என இரசிப்பதற்கு எத்தனையோ இருக்கின்றன. இந்தப் பழக்கம் மனதுக்கும் உடலுக்கும் ஆரோக்கியத்தைத் தரும். மனதில் ஏற்பட்ட காயங்கள் பலவற்றை காலம் தானாக மாற்றி விடுவதை நாம் அன்றாட வாழ்வில் அவதானித்திருக்கிறோம்.

கலப்படமற்ற இயற்கையான உணவுவகைகள், நோயைத்தடுக்கவும், நோயைத் தீர்க்கவும் வல்லவை. ஊர்க்கோழி முட்டை, இளநீர், இயற்கையான உணவு உண்ணும் பசுவினுடைய பால், மோர், பச்சையிலை உண்ணும் ஆட்டின் பால், இயற்கை உரமிட்டு மருந்து தெளிக்காமல் வளர்க்கப்பட்ட மரக்கறி வகைகள், ஊர்க்கோழி இறைச்சி, இயற்கையாக வளரும் அகத்தி, சண்டி, முருங்கை, தவசி முருங்கை போன்றவற்றின் இலைவகைகள், வாழைப்பொத்தி, தானாகப் பழுத்த பழவகைகள், கடலிலே பிடித்த உடன் மீன்வகைகள், இறால், தேசிக்காய், சுண்டங்கத்தரி என எத்தனை இனிமையான, இயற்கையான, இலகுவில் கிடைக்கக் கூடிய உணவு வகைகள் எம்மத்தியில் உள்ளன. இருந்தும் சத்துமாப்பேணிகளுக்கும் இரசாயன உணவுகளுக்கும் நாம் ஆசைப் படுவதன் காரணம் என்ன? சூரிய பகவான் எமக்கு சக்தியை மட்டும் கொடுக்கவில்லை. பல நோய்க் கிருமிகளிலிருந்தும் எம்மைப் பாதுகாத்துவருகின்றான். அன்றாட பாவனைப்பொருட்களான தலையணை, பாய், மெத்தை போன்றவற்றை சூரிய வெயிலில் காயவிடுவதன் மூலம் பல ஆபத்தான கிருமி களை இயற்கையான முறையில் அழித்து விட முடியும். இயற்கையாகப் பொழியும் மழை நீரைச் சேகரித்து அருந்திவருவது ஆரோக்கியத்துக்கு நல்லது மட்டுமல்ல, புற்றுநோய்கள் மற்றும் சிறுநீரக நோய்களிலிருந்தும் எம்மைப் பாதுகாக்கும்.

பூட்டிய அறையினுள்ளேயும், வீட்டினுள்ளேயும் இரும்பு இயந்திரங்களில் ஏறி உடற்பயிற்சி செய்வதிலும் பார்க்க இயற்கையுடன் ஒன்றி வீட்டுத்தோட்டமோ விலங்கு விவசாயமோ செய்வதிலும், பயணங்களுக்கு சைக்கிள்களைப் பயன்படுத்துவதிலும், நடந்து செல்வதிலும் ஆர்வத்தை வளர்த்துக்கொள்வதன் மூலமும், எமது அன்றாட தேவைகளை நாமே செய்வதன் மூலமும் நாம் செய்யும் உடற்பயிற்சியை பயன் மிக்கதாகவும் மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கக்கூடியதாகவும் மாற்றிக் கொள்ளலாம்.



இயற்கைக்கும் சில சமயம் இயலாமல் போகலாம். சில நோய்த்தடுப்புகளுக்கும் நோய் குணமாக்கல்களுக்கும் இயற்கையான நடைமுறைகள் மட்டும் போதாமல் போகலாம். அந்தச் சந்தர்ப்பங்களில் மட்டும் செயற்கை என்ற ஆயுதத்தைத் தூக்குவோம். மொத்தத்தில் செயற்கைத் தனத்தின் கால்களில் சரணாகதி ஆகாமல் செயற்கையை சாதுரியமாகப் பயன்படுத்த முயல்வோம். இயற்கை என்ற இனிய வைத்தியனின் கவனிப்பிலே சுகம்பெறுவோம்.

**சி.சிவன்சுதன், பொது வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை.**

---

# முட்டை பற்றிய சில உண்மைகள்

விலை குறைந்த அதியுச்ச ஊட்டச்சத்துள்ள உணவு. முட்டை உண்பதால் குருதி கொலஸ்ரோலின் அளவு அதிகரிக்க மாட்டாது.

பசியைக் கட்டுப்படுத்தும் வல்லமை முட்டைக்கு அதிகமாக இருப்பதால் ஒருவரின் நிறைகுறைப்பு முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

ஆரோக்கியமான ஒவ்வொருவரும் தினமும் ஒரு முட்டை உண்டு வருவது அவரின் ஆரோக்கியத்தைப் பேண உதவும். முட்டையை அரை அவிய லாகவோ பச்சையாகவோ உண்பதை தவிர்த்து விடவேண்டும்.

முட்டை மஞ்சட்கருவில் நிரம்பாத கொழுப்பமிலமும் அன்டி ஒக்சிடன்களும் பல கனியுப்புக்களும் அடங்கியுள்ளதால் உடலுக்கு ஆரோக்கியமானது. எனவே இதனை தவிர்த்து விடவேண்டிய அவசியமில்லை. காடை முட்டைகளில் கோழி முட்டைகளிலும் பார்க்க ஊட்டச்சத்துக்களின் செறிவு அதிக மாகும்.

தாரா முட்டைகளும் உடல் நலத்திற்கு ஆரோக்கியமானது. முட்டைகளை சேமித்து வைக்கும் பொழுது அதன் கூரான பகுதி கீழ்நோக்கி இருக்கும் படி வைத்தால் அவை பழுதடையும் வீதம் குறைவாக இருக்கும்.

அறை வெப்பநிலையில் முட்டைகளை 7 நாட்களுக்கு சேமித்து வைக்கமுடியும்.

கோழி முட்டை ஒன்றின் சராசரி சக்திப்பெறுமானம் 70 k.cal ஆகும்.

**சி.சிவன்சுதன், பொது வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் விலைகள் சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் கடந்த காலங்களில் பெய்த கடும் மழை, வெள்ளம் உள்ளிட்ட இதர காரணங்களினால் நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

இதன்படி, கடந்த நாட்களில் 100 ரூபாவிற்கு குறைவாக விற்பனை செய்யப்பட்ட மரக்கறிகள் இன்று 300 முதல் 500 ரூபாவைக் கடந்துள்ளதாக வர்த்தகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பயிர்கள் சேதமடைந்துள்ளதால் மரக்கறிகளின் விலைகள் இவ்வாறு அதிகரித்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே நாடளாவிய ரீதியில் இவ்வாறு மரக்கறிகளின் விலைகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

மேலும் சீரற்ற காலநிலை காரணமாக தற்போது மரக்கறிகள் நுகர்வோரின் தேவைக்கு ஏற்ற வகையில் வரத்து இல்லாததால் காய்கறிகளின் விலைகள் மேலும் உயர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந)

# ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைய தயாராகும் பொன்சேகா

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொள்ள பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தயாராகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

ஹட்டன் வெலி ஓயாவில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் இதனை தெரிவித்துள்ளார்.

"சரத் பொன்சேகா அனைத்து கட்சிகளின் தலைவர்களையும் விமர்சித்து வந்தவர். அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க விரும்புகிறார்.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் பதவி வழங்கப்படாமை தொடர்பில் சரத் பொன்சேகா விமர்சித்தது கவலைக்குரிய விடயமாகும்." என அவர் தெரிவித்தார். (ந)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 420 | 400 | 300-350 | 350-400 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 200 | 190 | 380 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 350 | 120-150 | 150 |
| தக்காளி | 700 | 800 | 650 | 650 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 140 | 100-140 | 150 |
| கோவா | 300 | 300 | 350 | 250 | 300 |
| கரட் | 350 | 550 | 600 | 400 | 500 |
| பூசணி | 180 | 180 | 170 | 150 | 140 |
| புடோல் | 200 | 300 | 300 | 200 | 280 |
| வாழைக்காய் | 160 | 150 | 150 | 120-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 300 | 300-550 | 340 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 240 | 240 | 250 |
| பாகற்காய் | 800 | 1000 | 1200 | 700 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 120 | 150 | 150 |
| பயற்றங்காய் | 450 | 400 | 350 | 300-350 | 450 |
| லீக்ஸ் | 650 | 600 | 700 | 600 | 700 |
| பீற்றூட் | 600 | 550 | 700 | 400 | 700 |
| கறிமிளகாய் | 650 | 700 | 400 | 500 | 700 |
| முருங்கைக்காய் | 1200 | 1200 | 800 | 600-900 | 1000 |
| போஞ்சி | 800 | 650 | 850 | 450 | 900 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | - | 250 |
| கீரை - 1 பிடி | 60 | 100 | 120 | 80-100 | 50 |
| தேசிக்காய் | 800 | 1100 | 1000 | 800-1000 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-100 | 90-110 |
| இராசவள்ளி | 450 | 500 | 500 | 300 | 450 |
| வெங்காயப்பூ | 500 | 450 | 600 | - | 400 |
| முள்ளங்கி | 160 | 200 | 250 | 350 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 100 | 60 |
| ஈரப்பலா | 120 | 200 | 120 | 80 | 200 |

# இன்று ஒரு தகவல் 161



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# கொசுத் தொல்லை

பனாமா கால்வாயைக் கட்டும் போது அதற்கு ஒரு பெரிய தடையாக இருந்தது எது தெரியுமா? ஏதாவது பொறியியல் சம்பந்தப்பட்ட சிக்கல் என்று நினைக்கின்றீர்களா? அது தான் இல்லை! கொசுக்கள் ஏற்படுத்திய பிரச்சினை தான் பெரிய பிரச்சினையாக இருந்தது. அங்கே சுற்றியிருந்த காடுகளில் கொசுக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.கால்வாய் கட்டுகின்ற ஆசாமிகளைப் பார்த்து விட்டது. சும்மா விடுமா? கடிக்க ஆரம்பித்தது. அங்கே வேலை செய்பவர்கள் எல்லாம் கொஞ்ச நாள் கூட தொடர்ந்தா நோய் நொடி இல்லாமல் இருக்க முடியவில்லை. பெரிய தொந்தரவாகப் போய்விட்டது.

சரி கால்வாய் கட்டுவது அப்புறம் இருக்கட்டும். முதலில் இந்தக் கொசுக்களை விரட்டி அடிக்க வேண்டும். அதற்கு என்ன வழி என்று பார்த்தார்கள். முதலில் அந்த வேலையை செய்து முடித்தார்கள். அதற்கு பின் தான் கால்வாயை கட்டி முடித்தார்கள். கொசுக்கடிக்கு ஆளாவது மனிதன் மட்டும் தானா? விலங்குகளும் இதற்குத் தப்ப முடியவில்லை.

பன்றி,நாய்க்குட்டி இதையெல்லாம் கடித்து இரத்தசோகை நோயை உண்டாக்கி விடுகிறது. பால் பண்ணைகளில் கறவை மாடுகளை தொந்தரவு செய்கிறது. அதனால் பல பிரச்சினைகள். பன்றிகளில் இருந்து மனிதனுக்கு பரவுகின்ற மூளைக் காய்ச்சல், செம்மறி ஆடுகளில் காணப்படுகின்ற "நீலநாக்கு" நோய். இது எல்லாம் பரவுவதற்கு காரணம் "குயூலி காய்ட்ஸ்" என்ற கொசு வகை தான்.

பண்ணை வைத்திருப்பவர்கள் எல்லாம் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் தேங்கியிருக்கின்ற இடத்தில் மண்ணெண்ணையில் ஐந்து சதவீதம் அளவிற்கு D.D.T ஐ கலந்து தெளிக்க வேண்டும். பண்ணையில் இருந்து கொசுக்களை விரட்ட புகைமூட்டம் போடலாம். காய்ந்த இலைகள் முக்கியமாக வேப்பம் இலைகளை உபயோகப்படுத்தலாம். வேப்பம் பிண்ணாக்கை கரித்தூளுடன் கலந்து முகைமூட்டம் போடலாம்.

வேப்பம் பிண்ணாக்கு, வேப்பம் இலை இவற்றிற்கெல்லாம் நச்சுயிரை அழிக்கின்ற சக்தி அதிகமாக உண்டு. கார்த்திகை மாதம் ஊர் முழுவதும் சொக்க கொளுத்துகிறோமே எதற்காக? அது ஒரு விதமான புகைமூட்டம். பெரிய கார்த்திகைக்கு முன் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கும். அதற்குப் பின் தொல்லை குறைய ஆரம்பிக்கும்.

மலேரியாவை முழுதாக குணப்படுத்த வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்கிறார்கள். முடியவில்லை. நவீனமாக சிலவற்றை கண்டு பிடித்து இருக்கிறார்கள். கொசு விரட்டி சோப் (Mosquito Repellant soap). இதை மேற்கு பசுபிக் நாடுகளில் பயன்படுத்துகிறார்கள். WHO இருக்கிறதல்லவா உலக சுகாதார நிறுவனம். அதனுடைய மண்டல அலுவலகம் மணிலாவில் இருக்கிறது. அங்கு இந்தச் சோப்பை பற்றி பரிசோதனை எல்லாம் செய்து பார்த்தார்கள்.

இந்த சோப்பை நமது உடலில் பூசிக்கொண்டு கழுவாமல் காய விட்டுவிட வேண்டும். பின் கவலை இல்லை. அடுத்த 6 இல் இருந்து 12 மணி நேரம் வரைக்கும் கொசுக் கடியைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. கொசுக்கள் தான் கவலைப் பட வேண்டும். ஏன் என்றால் அந்த நேரம் நம்மைக் கடித்தால் அது குளோஸ்! ஆம் செத்துப்போய் விடும்.

ஒவ்வொரு வருடமும் மலேரியாவினால் 300 மில்லியன் மக்கள் இறந்து போகிறார்கள். வருடத்திற்கு ஒரு மில்லியன் ஆப்பிரிக்க குழந்தைகளின் உயிருக்கு இதனாலே ஆபத்து என்று ஒரு குறிப்பு இருக்கிறது. அதனால் இதை அலட்சியமாக விட்டுவிடலாமா? புதிது புதிதாக நல்ல மருந்துகள் எல்லாம் வந்திருக்கிறது.

இன்னொரு முக்கியமான கண்டுபிடிப்பிற்காக நாம் காத்துக் கொண்டிருக்கின்றோம். அதாவது மலேரியா தடுப்பூசி மருந்து. Vaccine இப்போது பரிசோதனை நிலையில் இருக்கிறது. விரைவில் வந்துவிடும்.

கொசுவிற்கு குடும்ப நலத்திட்டத்தை சிபாரிசு செய்யும் யோசனையும் இருக்கிறது. அது சம்பந்தமாக நமது ஊரில் சிலவற்றை கண்டுபிடித்திருக்கிறார்கள். ஏற்கனவே குடும்பஸ்தவர்களுக்கு ஏகப்பட்ட தொல்லைகள். அதில் கொசுத்தொல்லை வேற.

"எங்களது சபாவில் நீங்கள் வந்து கச்சேரி செய்ய வேண்டும்" என்று ஒருவரைப் பார்த்துக் கூப்பிட்டார்கள். "மக்கள் அடிக்கடி கை தட்டும் சத்தம் எனக்கு கேட்க வேண்டும் அப்போது தான் நல்ல மனநிலை இருக்கும்" என்றார் இவர். "அதற்கு கவலையே படாதீர்கள் தாராளமாக கை தட்டுவார்கள். ஏன் என்றால் எங்கள் சபாவில் கொசுத்தொல்லை ஜாஸ்தி!" என்றார் வந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னம் சூட்டும் நிகழ்வு



(அக்கராயன்)

கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வாரம் பாடசாலை அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், முன்னாள் வட்டக்கச்சி மத்திய கல்லூரி முதல்வர் எஸ். கனகசிங்கம், வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் ஓய்வு நிலை அதிபர் திருமதி. ம.கேதீஸ்வரன், பழைய மாணவர்களான திருமதி. சிவனேஸ்வரி, புஸ்பராசா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சின்னங்களை அணிவித்தனர். (நி-350)

# மன்னார்-உப்புக்குளம் நளவன் வாடியில்
## வளர்ப்பு நாய்கள் மர்மமான முறையில் உயிரிழப்பு



(மன்னார்)

மன்னார் உப்புக்குளம் நளவன் வாடிப் பகுதியில் வீட்டு வளர்ப்பு நாய்கள், காகங்கள் கடந்த சில நாட்களாக மர்மமான முறையில் உயிரிழந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மிகவும் ஆரோக்கியமாக அனைத்து தடுப்பூசிகளும் போடப்பட்டு கிரமமான முறையில் பராமரிக்கப்பட்டு வந்த நாய்கள் திடீரென இறப்பது தங்களுக்கு வேதனையளிப்பதாகவும் தெரிவித்தனர்.

குறித்த நாய்கள் வீட்டில் இருந்து வெளியில் செல்லும் நிலையிலே குறித்த சம்பவம் இடம்பெற்று வருகின்றது.

இதுவரை 8 நாய்கள் இவ்வாறு உயிரிழந்த நிலையில் மேலும் மூன்று நாய்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் குறித்த நாய்களுக்கு அப்பகுதியில் யாரோ நஞ்சு



கலந்த உணவை வழங்கியிருக்கலாம் எனவும் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில் நாய்கள் மாத்திரமன்றி காகங்கள் மற்றும் கோழிகளும் உயிரிழந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இச் சம்பவம் குறித்து உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-285)

# அச்சுறுத்தல் விடுக்கும்
## டிப்பர் உரிமையாளர்கள்

(அக்கராயன்)

மணல் அகழ்வு தகவல்களை கூட்டங்களில் வெளிப்படுத்தியவர்களின் வீடுகளுக்கு சென்று அச்சுறுத்தல் விடுக்கும் செயற்பாடுகளில் டிப்பர்களின் உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் துணுக்காய்ப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கடந்த 15 ஆண்டுகளாக ஐயன்கன் குளம், புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களில் நடைபெறுகின்ற சட்ட விரோத மணல், கிரவல், மரங் கடத்தல் தொடர்பாக தகவல்கள் தெரிவிக்கப்பட்ட நிலையில் மேற்படி கிராமங்களில் இருந்து வெளியிடங்களுக்கு கொக்காவில் வழியாக அகழ்வு பொருட்கள் கொண்டு செல்ல முடியாது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பும் ஐயன்கன்குளம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் கூட்டத்தில் தகவல்கள் வழங்கியவர்கள் வீடுகளுக்கு செல்லும் டிப்பர் உரிமையாளர்கள் அச்சுறுத்தல்களை விடுப்பதுடன் எந்த தடை இருந்தாலும் கொக்காவில் வழியாக அகழ்வுப் பொருட்கள் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படும் என தெரித்து வருகின்றனர். (நி-350)

# 66,238 அபாயகரமான வெடிபொருட்கள் இதுவரை அகற்றப்பட்டுள்ளன
## ஸார்ப் நிறுவனம் தகவல்

(கண்டாவளை)

கண்ணி வெடி அகற்றலில் ஈடுபடும் ஸார்ப் நிறுவனமானது கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இன்று வரையான காலப்பகுதியில் இருந்து அறுபத்தாறாயிரத்து இருநூற்று முற்பத்தெட்டு அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளதாக அந்நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

இலங்கையின் வட பகுதியில் மனிதாபிமான கண்ணி வெடியகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்க நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணி வெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் இன்று வரையான காலப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தச்சடம்பன் அம்பகாமம்ஒழுமடு மற்றும் மாங்குளம் கொக்காவில் பகுதியிலும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சுதந்திரபுரம் மல்லிகைத்தீவு, புதுக்குடியிருப்பு மேற்கு கிழக்கு மண்ணாகண்டல் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் முப்பது இலட்சத்து பதினாறாயிரத்து அறு நூற்று எண் பத்தொரு சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து அறுபத்தாறாயிரத்து இரு நூற்று முற்பத்தெட்டு அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளது.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை புதுக்குடியிருப்பு ஒழுமடு மாங்குளம் கொக்காவில் மற்றும் ஆனையிறவிலும் துரிதகதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-315)

# சான்றுப் பொருட்களை உரிமை கோரல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 431 (3) ஆம் பிரிவின் பிரகாரம் வழக்கு இலக்கம் AR/ 419/ 24 - மோட்டார் சைக்கிள் மற்றும் AR/ 420/ 24 - இரண்டு தண்ணீர் மோட்டார்கள் மேற்குறிப்பிட்ட சான்றுப் பொருட்களின் உரிமையாளர் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ளுமாறும், அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து 2 மாதங்களின் பின் எதுவிதமான முன் அறிவித்தல்கள் வழங்கப்படாது சான்றுப் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என முல்லை மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி)

# மரண அறிவித்தல்
## செல்வன்.அருண் அபிஷேக்



தோற்றம் மறைவு
22.01.2007 21.06.2024

அல்வாய் அம்பிகை கவிஞர் செல்லையா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகதாஸ் அருணின் அன்பு மகனும் மூத்த மகனும் ஆகிய செல்வன் அருண் அபிஷேக் 21.06.2024 வெள்ளிக்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

யோகதாஸ் ஜெகதாம்பிகையின் அன்புப் பேரனும், அஸ்வயன், அஷ்வத் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஜனிகாந் - வள்ளிமயில், அசோக்காந் - இந்திரா ஆகியோரின் பெறாமகனும், ஜான்சிராணி - சிவகாந்தன் (லண்டன்), றபேக்கா - பிரதீப் (கனடா), கீர்த்தனா ஆகியோரின் அன்பு மருமகனும், தெய்வாம்பிகை தர்மராசா, இராசாம்பிகை கமலேஸ்வரன் (சுவிஸ்), அகிலன் வைதேகி (கனடா), ஆகியோரின் அன்புப் பேரனும், தரணிகா,தனுஷிகா, தர்ஷா, அஸ்விகா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், நிதன், நிதா (லண்டன்), ஐயந் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.06.2024 இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்வாய் பங்கு வேம்படி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அல்வாய் அம்பிகை,
கவிஞர் செல்லையா வீதி,
அல்வாய்.

தகவல்
குடும்பத்தின் சார்பில்,
யோகதாஸ் ரஜனிகாந்.

(C-680)

# நெல்லை உரிய விலைக்கு சந்தைப்படுத்த முடியவில்லை
## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி குடமுருட்டி குளத்தின் கீழான சிறுபோக செய்கையின் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

கிளிநொச்சி திணைக்களத்தின் கீழ் உள்ள குடமுருட்டி குளத்தின் கீழ் இவ்வாண்டு 330 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதாவது குறித்த குளத்தின் கீழான பயிர்செய்கையானது குளத்தின் அபிவிருத்தி பணிகள் பெப்ரவரி.மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதாலும் கால நிலை மற்றும் நோய் தாக்கம் என்பவற்றாலும் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை என்றும் அறுவடை செய்கின்ற நெல்லை சரியான விலைக்கு சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (நி-315-3156)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் கொடுந் துன்பக் காட்டுக்குத்தான் அழைத்துச்செல்லும். – *கவி தாம்ஸன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# எங்களின் உழைப்பை உறிஞ்சுகின்ற கொடுமை

ஏமாற்றிப் பிழைக்கின்ற நிலைமைகள் நம் மண்ணில் மிக வேகமாகி வருவதைக் காண முடிகின்றது.

தனிநபர் முதல் நிறுவனங்கள் வரையில் ஏமாற்று நாடகம் நடப்பது தெரிந்த விடயம்.

அதிலும் வாகனங்களைத் திருத்துகின்ற வாகனக் கம்பனிகள் பொதுமக்களை ஏமாற்றி வருவதாகப் பலரும் முறையிடுகின்றனர்.

ஆம், வாகனக் கம்பனிகள் தம்மிடம் கொள்வனவு செய்த வாகனங்களைப் பழுதுபார்க்கின்ற நிலையங்களை யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழ் மாவட்டங்களில் நிறுவியுள்ளன.

இத்தகைய நிறுவனங்கள் தம்மிடம் திருத்தத்துக்காக வருகின்ற வாகனங்களுக்கு உரிய திருத்த வேலைகளைச் செய்யாமல், ஏகப்பட்ட கட்டணங்களை அறவிடுகின்றன.

தவிர, சிறு பிழையாக இருந்தாலும் புதிதாக உதிரிப்பாகம் மாற்ற வேண்டுமெனக் கூறி எல்லை மீறிய கட்டணத்தை அபகரிக்கின்றன.

இதுதவிர, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு வாகனக் கம்பனியின் திருத்தகத்தில் செய்யப்பட்ட வேலையை, அந்த நிறுவனம் தான் செய்யவில்லை எனக்கூறி மறுதலித்த சம்பவம்; பிரஸ்தாப நிறுவனங்கள் தமிழ் மக்களின் உழைப்பை உறிஞ்ச வந்தவையோ என்று நினைக்க வைக்கிறது.

ஆம், லீசிங் அடிப்படையில் வாகனங்களைக் கொள்வனவு செய்து அதன்மூலம் கஷ்டப்பட்டு உழைத்து வீட்டுச்சீவியத்தை நடத்துவதில் நம்மில் பலரும் ஈடுபட்டுள்ளனர்.

பொருட்களை ஏற்றி இறக்கி அதில் கிடைக்கின்ற சிறு இலாபத்தைக் கொண்டு தம் குடும்ப சீவியத்தை நடத்தலாமென்றால், அதுதான் பெரும்பாடாய் அமைகிறது.

ஆம், வாகனத்தில் ஏற்பட்ட ஒரு சிறு திருத்தத்தை அந்த வாகனக் கம்பனியின் திருத்தகத்தில் செய்வது நல்லதென்ற அடிப்படையில் அங்கு சென்றால் அங்கோ, குறித்த வாகன உரிமையாளர் வியர்வை சிந்தி உழைத்ததை உறிஞ்சுகின்ற மிக மோசமான கொடுமை நடக்கிறது.

உதிரிப்பாகம் புதிதாகப் பொருத்த வேண்டும் எனக் கூறுவது முதற்கொண்டு தாமே திட்டமிட்டு பிழைகளை ஏற்படுத்தி அதற்கும் உயர்ந்த கட்டணங்களை அறிவிடுகின்ற நாசகாரம் நடப்பது தெரிகிறது.

எனவே இதுவிடயத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் சபைகள் சம்பந்தப்பட்ட இடங்களில் விசாரணைகளை நடத்த வேண்டும்.

தவிர, குறித்த வாகனத் திருத்தகக் கம்பனிகளால் பாதிக்கப்பட்டவர்கள் முறையிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இதைச் செய்யாதவரை தென்பகுதியில் இருந்து இங்கு வந்துள்ள குறிப்பிட்ட சில வாகனத் திருத்தகங்கள் (இதில் நேர்மையாகச் செயற்படுகின்ற நிறுவனங்களும் உண்டு) நம் மக்களின் உழைப்பை உறிஞ்சவே செய்யும்.

# திரிபோசா வழங்கப்படாமையினால் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு

## மருத்துவ சங்கங்களின் கூட்டமைப்பு

திரிபோசா வழங்கப்படாமையினால் 6 மாதங்கள் முதல் 3 வயது வரையிலான குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவ சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அதன் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

6 மாதங்களுக்கும் அதிகமான 3 வயதிற்கு குறைவான குழந்தைகளுக்கு திரிபோசா வழங்குமாறு பல கோரிக்கைகளை முன்வைத்தோம்.

இந்த வயதிற்கு இடைப்பட்ட குழந்தைகளே அதிகமாக போசனைக் குறைபாட்டிற்கு உள்ளாகி வருவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவ சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

# 8, 139 ஆசிரியர்கள் பற்றாக்குறை

## கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு உட்பட்ட பாடசாலைகளில் 8,139 ஆசிரியரகள் பற்றாக் குறை நிலவுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் ஆங்கில ஆசிரியரகள் பற்றாக் குறைக்குத் தீர்வாக, ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்கள் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் எதிர்காலத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையும் 11,048 ஆக காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேசிய பாடசாலைகளுக்கு 2,500 ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

# இணையவழி மூலம் கடன் வழங்கும் நிறுவனங்கள்

## விசாரணை ஆரம்பித்த குற்றப்புலனாய்வுத்துறை

இணையவழி மூலம் கடன் வழங்கும் நிறுவனங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் துறை விசாரணையை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முகநூல் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் ஊடாக பல்வேறு விளம்பரங்களை செய்து நாட்டில் இயங்கும் இணையவழி கடன் வழங்கும் நிறுவனங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பிலேயே இந்த விசாரணை நடத்தப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தகவலை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல கடன் வழங்கும் நிறுவனங்கள் சுற்றுலா விசாவில் நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டினரால் நடத்தப்படுவதாகவும், அவை கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை அல்ல என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

மேலும், இணையவழி கடன் வழங்கும் நிறுவனங்கள் வெளியிடும் விளம்பரங்களால் மக்கள் ஏமாற்றப்பட்டு கடனை பெறுவதாகவும், ஆனால் அந்த கடனுக்கு அதிக வட்டி வசூலிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உதாரணமாக, 15,000 ரூபாய் கடன் வாங்கினால், கடன் தொகையைத் தீர்க்க சுமார் 8000 ரூபாய் வட்டி அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத்தில் கடன் வழங்கும் ஆறு நிறுவனங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடன் வழங்குநர்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கிக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7,10)

# இந்த வருடம் 27,197 டெங்கு நோயாளர்கள் பதிவு

(கொழும்பு)

இலங்கையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 27,197 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதன்படி மேல் மாகாணத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் டெங்கு நோய் காரணமாக இதுவரையில் 9 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழைகாரணமாகடெங்கு நோய்பரவும்அபாயம்காணப்படுவதால் சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதார அமைச்சுப் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-7,10)

# மாத்தளையில் விபத்து தாய், மகள் உயிரிழப்பு

மாத்தளையில்முச்சக்கர வண்டி ஒன்று பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

வத்தேகமவில் இருந்து அனுராதபுரத்திற்கு புனித யாத்திரை சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 54 வயதுடைய தாயும்,17 வயதுடைய மகளுமே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் படுகாயமடைந்த மகனும், தந்தையும் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

# மோ.சைக்கிள் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(பதுளை)

பதுளை பிரதேசத்தில் பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரவளை - எட்டம்பிட்டிய வீதியில் எட்டம்பிட்டிய வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளையிலிருந்து எட்டம் பிட்டிய நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த சுவரொன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிள் சாரதி படுகாயமடைந்த நிலையில் பண்டாரவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை, பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரது சடலம் பண்டாரவளை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவின் வெளியக பொறிமுறையை மீண்டும் நிராகரித்த இலங்கை

(ஜெனீவா)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஆதாரங்களை சேகரிக்கும் வெளியக பொறிமுறையை இலங்கை மீண்டும் நிராகரித்துள்ளது.**



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆதாரங்களை சேகரிக்கும் இந்த பொறிமுறை பயனற்றது என ஜெனீவாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஆதாரங்களை சேகரிக்கும் வெளியக பொறிமுறை இலங்கையில் சமூகங்களை பிரிக்கவும் துருவமயப்படுத்தவும் மாத்திரம் உதவும் என ஜெனீவாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதி நிதி ஹிமாலி அருணதிலக தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த பொறிமுறையால் யாருக்கும் எந்தவொரு குறிப்பிடத்தக்க நன்மைகளும் இல்லை என்பதை சுட்டிக்காட்டிய அவர், உறுப்பு நாடுகளின் வளங்கள் வீணடிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உலகெங்கிலும் உள்ள சவாலான மனித உரிமை சூழ்நிலைகளை பாரபட்சமற்ற விதத்திலும் தேர்ந்தெடுக்கப்படாத தன்மை மற்றும் இரட்டை நிலைப்பாடுகளை தவிர்த்தும் ஐ.நா மதிப்பிட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த கோட்பாடுகளுக்கு முரணான தன்னிச்சையான செயற்பாடுகளை இலங்கை கடுமையாக எதிர்க்கிறது எனவும் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறை என்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு உறுப்பு நாடுகள் வழங்கிய ஆணைக்கு முரணானது எனவும் ஹிமாலி அருணதிலக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த நடவடிக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத் தினை அரசியல் மயப்படுத்தி அதன் மீதான நம்பிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என வும் அவர் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி)

## 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு அடையாள அட்டைகளை பெறுவதற்கான கால அவகாசம் நீடிப்பு- ஆட்பதிவு திணைக்களம்

(கொழும்பு)

நாற்பது வயதிற்கு மேற்பட்ட இதுவரையில் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.


இவர்கள் அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான கால அவகாசம் இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இவர்கள் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது.

முன்னதாக இதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்தக் கால அவகாசம் இம்மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களத்தின் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# பரமபிதா காட்டிய பாதை

## "தாழ்ச்சியையும் எளிமையையும் நமதாக்குவோம்".



திருமுழுக்கு யோவானின் பிறப்பு விழாவைக் இன்று நாம் கொண்டாடுகின்றோம். ஹெப்ரோன் என்ற மலைநாட்டில் வாழ்ந்த எலிசபெத்து செக்கரியா தம்பதியினருக்கு அவர்களுடைய முதிர்ந்த வயதில் பிறந்த குழந்தைதான் இவர். அவர்கள் நீண்ட நாள்களாகியும் குழந்தைப் பேறு இல்லாமல் இருந்தார்கள். ஆயினும் அவர்கள் கடவுளுடைய பார்வையில் நேர்மையுள்ளவர்களாக இருந்தனர்.

அதனால் தான் கடவுள் அவர்கள் மீது இரக்கம் கொண்டு அவர்களுக்குக் குழந்தைப் பேற்றினைக் கொடுத்தார். புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு முன்னறிவிப்பின் போது, ஆண்டவரின் தூதர், செக்கரியாவிடம் மேற்கொண்ட உரையாடலை உற்று நோக்குவோம்: "செக்கரியா, உம் மனைவி எலிசபெத்து உமக்கு ஒரு மகனைப் பெற்றெடுப்பார் தாய் வயிற்றில் இருக்கும்போதே தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவார். அவர், இஸ்ரயேல் மக்களுள் பலரைத் தம் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வரச் செய்வார். எலியாவின் உளப்பாங்கையும் வல்லமையையும் உடையவராய் அவருக்கு முன் செல்வார் ஆண்டவருக்கு ஏற்புடைய ஒரு மக்களினத்தை ஆயத்தம் செய்வார்" என்றுரைக்கிறார்.

திருமுழுக்கு யோவான் சாதாரண ஒரு மனிதர் அல்ல, அவர் மனிதராகப் பிறந்தவர்களுள் பெரியவர். திருமுழுக்கு யோவானோ தாயின் கருவில் இருக்கும்போது தூய ஆவியினால் முற்றிலுமாக ஆட்கொள்ளப்பட்டவர். திருமுழுக்கு யோவானோ ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக மக்களைத் தயார்ப்படுத்தினார்,

இயேசு வந்தபோது சுட்டிக்காட்டினார், இயேசுவிற்குத் திருமுழுக்குக் கொடுத்தார். அதனாலேயே திருமுழுக்கு யோவான் மற்ற எல்லா இறைவாக்கினர்களையும் விட உயர்ந்தவராக இருக்கின்றார். திருமுழுக்கு யோவான் கடவுளின் வார்த்தையை - உண்மையை - மிகத் துணிவோடு எடுத்துரைத்தார். அதற்காக அவர் யாருக்கும் பயப்படவில்லை. தன்னிடம் திருமுழுக்குப் பெறவந்த யூதர்களிடம், விரியன் பாம்புக் குட்டிகளே என்கிறார். தன்னுடைய சகோதரனுடைய மனைவியோடு முறை தவறி வாழ்ந்த ஏரோதைக் கண்டிக்கிறார். இப்படியாக அவர் உண்மையின் உரைக் கல்லாக விளங்குகின்றார்.

இறுதியிலே தான் கொண்ட கொள்கைக்காக, உயிர்துறக்கிறார். திருமுழுக்குயோவானிடம் இருந்த துணிச்சலும் உண்மையை உரக்கச் சொல்லும் மனத்திடமும் நம்மிடம் வளர்க்க வேண்டும். பல நேரங்களில் எதற்கு வம்பு என்று வாய் பொத்தி, கூனிக் குறுகி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் ,யேசுவைப் போன்று, திருமுழுக்கு யோவானைப் போன்று உண்மைக்குச் சான்று பகர கூடியவர்களாக இருக்க வேண்டும்.

திருமுழுக்கு யோவானின் பிறப்பு விழாவைக் கொண்டாடும் நமக்கு அவரிடத்தில் இருந்த தாழ்ச்சியும் எளிமையும் இருக்கின்றதா என சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு நாம் ஒரு சாதாரண பொறுப்பில், பதவியில் இருந்து கொண்டு நாம்தான் பெரியவர்கள் என்று காட்ட விளைகிறோம். ஆனால் திருமுழுக்கு யோவானோ மிகப் பெரிய இறைவாக்கினராக இருந்த போதும் தாழ்ச்சியோடு இருந்தார்.

அது தான் நாம் அவரிடமிருந்து கற்க வேண்டிய முதன்மையான பாடமாக இருக்கின்றது. பதவியும் பெயரும் உயர உயர தாழ்ச்சியும் நம்மிடத்தில் பெருக வேண்டும், மாறாக கர்வம் அல்ல.

ஆகவே, திருமுழுக்கு யோவானின் பிறப்பு விழாவைக் கொண்டாடும் இந்த நாளில் அவரிடம் இருந்த சாட்சிய வாழ்வையும், தாழ்ச்சியையும் எளிமையையும் நமதாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 இலட்சம்...

மீட்கப்பட்டுள்ளது

உதயநகர் மேற்குப் பகுதியில் வீடு ஒன்றுக்கு தனது மகனுடன் நண்பர்கள் இருவர் வீட்டுக்கு வருகை தருவது வளமையான ஒன்றாகும்.

கடந்த 16.06.2024 அன்று வீட்டில் வைப்பட்ட நகையை தேடியபோது நகை காணாமல் போயுள்ளது. மேலும் தேடியபோது நகையை காணவில்லை என வீட்டின் உரிமையாளர் கடந்த 20.06.2024 அன்று கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து கிளிநொச்சி பொலிஸார் விரைந்து செயற்பட்டமை அடுத்து களவாடப்பட்ட நகையுடன் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு நகையையும் மீட்டுள்ளார்கள். (ம-7,10,316)

## 25 சதவீத...

குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கோவிட்-19 மற்றும் பொருளாதார நெருக்கடி சூழல் ஏற்படுவதற்கு முன்னர் 200 மருத்துவர்களே வெளிநாடுகளுக்கு இடம்பெயரவிருந்ததாக சுகாதார அமைச்சின் புள்ளிவிபரங்களில் காணப்பட்டன.

எனினும் தற்போது 25 சதவீதமான மருத்துவர்கள் வெளிநாடுகளில் தொழில் பெறுவதற்கான தேர்வுகளில் சித்தியடைந்துள்ளதாகத் தரவுகள் காட்டுகின்றன.

இது எதிர்காலத்தில் நாட்டின் சுகாதார சேவையினை மிகவும் பாதிக்கும் என்றார். (ம-7,10)

## இலவசக்...

நாட்டின் கல்வித் திட்டத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் அதிகளவான தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

இலவசக் கல்வியைப் பாதுகாப்பதுடன், அனைத்து மாணவர்களுக்கும் பொதுவான வளங்களை ஏற்படுத்த வேண்டும்.

அதற்காக கல்வியில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதுடன், இதன்மூலம் தொழிலற்றோருக்கான பிரச்சினைகளை எதிர்காலத்தில் தீர்க்க முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## நோயாளியிடம்...

முன்தினம் மதியம் பார்வையாளர் நேரத்தில் நூதனமான முறையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர், நோயாளி ஒருவரிடம் நூதனமான முறையில் குறிப்பிட்ட நோயாளியை எக்ஸ் கதிர் படம் (X Ray) எடுக்க போக வேண்டும் எனவும் நீங்கள் உணவருந்தி குளித்து விட்டு ஆயத்தமாக இருங்கள் என்றும் கூறி அவரை எக்ஸ் கதிர்ப்படம் (X Ray) எடுக்கும் இடத்திற்கு கூட்டிச் சென்று நோயாளி அணிந்திருந்த மோதிரம், சிறுதொகைப் பணம் மற்றும் கைப்பை போன்றவற்றை திருடிச் சென்றுள்ளார்.

இதேவேளை, இந்தத் திருட்டு சம்பவமானது வைத்தியசாலை சிசிரிவி (CCTV) இல் பதிவாகியுள்ளதுடன் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம-7,10,33)

## நாட்டு...

சாதாரண மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு மீண்டும் அபிவிருத்தி அடையும் போது அந்த மக்களை ஒருபோதும் மறக்க மாட்டோம். அதன்படி மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உரிமை வழங்கும் உறுமய திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம்.

எனக்கு ஒரே ஒரு குறிக்கோள்தான் உள்ளது. அந்த உரிமையை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். காணி உரிமையை பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார். (ம-7,10)

## சொத்து வரி...

களில் முன்னிலைப்படுத்தப்படுவதாகவும் இதற்கு முன்னர் முன்னாள் நிதி அமைச்சர் என்.எம்.பெரேராவினால் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, இது மிகவும் முற்போக்கான திட்டம் என அவர் வர்ணித்ததுடன் இந்த வரி முன்னிலைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து எதிர்காலத்தில் சாமானியர்கள் மீது விதிக்கப்படும் மறைமுக வரியின் அளவைக் குறைத்து இந்த வரியின் மூலம் அனைவரும் பயன்பெற முடியுமென நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## புதிய பொருளா...

சக்தித்துறை தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையிலான பங்காளித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், 30 வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு புதிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை இந்திய ஒன்றிணைந்து சூரிய ஒளி மற்றும் புதுப்பிக்கத்தக்க பாரிய அளவிலான மின் உற்பத்தியை உருவாக்க எதிர்பார்ப்பதாகவும் யுத்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். இதற்கு மேலதிகமாக, யாழ்.குடாநாட்டின் பிரதான துறைமுகமான காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவின் உதவியைப் பெற்றுக்கொள்வது குறித்தும் இந்திய வெளிவிவகார அமைச்சருடனான கலந்துரையாடலில் முன்னுரிமை வழங்கப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் பலாலி விமான நிலையம் மற்றும் கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தின் அபிவிருத்தித் திட்டம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தரைமார்க்கமான தொடர்பை ஏற்படுத்துவதற்கான திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தை விரைவுபடுத்துவது குறித்தும் நாம் விரிவாகக் கலந்துரையாடினோம் என்றார். (ம-7,10)

## கொழு...

இலங்கையில் இந்திய கடலோர காவல்படை கப்பல் சாசெட் (Sachet) கொழும்பு துறை முகத்தை வந்தடைந்துள்ளது.

1,160 தொன் நிறையைக் கொண்ட இந்த கப்பல், 74.10 மீற்றர் நீளம் மற்றும் 11.4 மீற்றர் அகலம் கொண்டது. இது மணிக்கு 22 கடல் மைல் வேகத்தில் பயணிக்கும். இந்த கப்பலில் 14 அதிகாரிகள் மற்றும் 86 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். (ம-7,10)

# கட்டுநாயக்கவில் இருவர் கைது

(கொழும்பு)

பெருந்தொகை தங்கத்தினை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் வெளியே கொண்டு செல்ல முயன்ற மதகுரு ஒருவரும் பெண்ணொருவரும் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மக்காவிற்கு புனித யாத்திரை சென்று இலங்கை திரும்பிய மட்டக்களப்பு மற்றும் கல்முனை பிரதேசத்தை சேர்ந்த மதகுரு ஒருவரும் பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,10)

## பௌத்த...

ளிட்டவற்றை மையமாகக் கொண்டு மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் நினைவு முத்திரையொன்றும் நேற்று வெளியிடப்பட்டது. (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.06.22
சீட்டிழுப்பு இலக்கம் 5512
P 3 3 0 3 8 9

அத சம்பத
P 0 3 8 9
சீட்டிழுப்பு இலக்கம் 087
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1542
L 04 10 28 73 L
Double Chance 23117

மெகா பவர்
திகதி 22/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1860
H 08 09 13 30 55
47603

லக்கி 7 VIP
திகதி 2024.06.22
சீட்டிழுப்பு இலக்கம் 0338
V 7 7 7 6 6 6 V

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3754
சீட்டிழுப்பு திகதி 22.06.2024
Y 22 25 27 55
Y 10432

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.22
சீட்டிழுப்பு இலக்கம் 0821
சிம்மம் 02 07 20 36 சிம்மம்
70921 15

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
22.06.2024 வெற்றி வாரம் 220 வர்ணம் நீலம்
C 4 7 9 9 7 4
37515
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,159,084.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2486 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 22.06.2024 தினம் சனிக்கிழமை
05 42 46 72 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 94,753,524.80

சனிதா
திகதி 2024.06.22 வெற்றி வாரம் 4647
06 31 61 62 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,438,854.00
86509

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4198 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.06.22 தினம் சனிக்கிழமை
29 34 37 48 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,681,899.20
546149

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 03 07 10 31 70
1662 சிவப்பு 22.06.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 529,054,521.40

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2312
சீட்டிழுப்பு திகதி : 2024.06.22
09 23 40 68 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 122,080,970.40
192507
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீரடி சாய்பாபா கோவில் தரிசனம் மற்றும் தென்னிந்திய ஆலய தரிசனம் & சுற்றுலா**

சென்னை, மதுரை, கன்னியாகுமரி, ராமேஸ்வரம் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களை தரிசித்து சுற்றுலாத்தலங்களையும் கண்டு களிப்பதோடு சீரடி சாய்பாபா ஆலயத்தையும் தரிசித்து இறையருளைப்பெற பொன்னான சந்தர்ப்பம்...

மேலும் தகவல்களுக்கு SRIBABY ENTERPRISES PVT LTD

**076 946 4568**

1st Floor, 220 Stanley Road, Jaffna. (1308)

## win repair

உங்கள் குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், A/C பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வருகிறோம். சிறந்த முறையிலும் உத்தரவாதத்துடனும் திருத்தித் தருகிறோம். (1312)

**076 834 6136**
**076 906 4682**

**PickMe யாழ்ப்பாணத்தில்**

நீங்கள் வைத்திருக்கும் CAR/ VAN/ Lorry/ Motorcycle அனைத்தையும் PickMe Taxi சேவையில் இலவசமாக இணைத்து அதிக வருமானம் பெறலாம். (107)

**077 473 7737**

அழைக்கவும்.

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970 (861)

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378 | 076 097 3127**

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் வடக்கில் மினக்கெட்டான் வேம்படிக்கு அண்மையில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு :

**077 442 3337**
sumiruby@gmail.com
+4163058525 (1262)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 269/= | (Max)3Kg |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 280/= | (Max)3Kg |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 410/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 170/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg பெரிய கடலை | - 435/= | |
| 1 Kg வெள்ளைப்பச்சை | - 205/= | |
| 01 Ocean மீன் ரின் | - 380/= | ~~500/=~~ |
| 450g நெஸ்டமோல்ட் | - 749/= | ~~780/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3600/= | ~~3900/=~~ |
| 1 Kg பிருந்தா கறிமிளகாய்த் தூள் | - 1180/= | ~~1600/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 350/= | ~~450/=~~ |
| 750ml நல்லெண்ணை | - 1455/= | ~~1550/=~~ |
| 400g வட்டவல தேயிலை | - 999/= | ~~1140/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |

Max 02
400g Anchor
1015/=
~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (1318)

Happy Supermarket
0777 8080 30

## Show Money

**1%**

லட்சத்திற்கு 1000 மட்டுமே சகல நாடுகளுக்குமான வங்கி இருப்பு/ விசா சேவை (1263)

T.P : 075 033 6759

**அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்**
குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0664)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சியார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241

**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0664)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

**V2 VISA SERVICES**
**கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0664)


# மரண அறிவித்தல்



## செல்வி மாலதி சிவராசா

**(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/உயரப்புலம் மெதடிஸ்மிசன் வித்தியாலயம்)**

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் அமுதசுரபி பொன்னையா லேன், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மாலதி சிவராசா அவர்கள் 20.06.2024 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவராசா - லிங்கேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் ஜெயசீலன் (கனடா), சியாமளா(கனடா), மஞ்சுளா(கனடா), ஜெயதேவன்(லண்டன்), சீத்தா(இலங்கை), ஜெயந்தி (கனடா), ஜெயரங்கன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதர்ஜினி, தயாபரன், தேவதாசன், சுமிதா, முரளிதரன், சுரேஸ்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜதுனன், ஜனனி, ஏரன், சேரா, அக்ஷா, ஜசாக் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் லருஷன், திவ்யா, தினேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"அமுதசுரபி"
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை. (1307)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.